# அலை ஓசை

சமய – சமூக – இலக்கிய சஞ்சிகை





"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல
நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்"

(லூக்கா 6:36)

50/=

தை - பங்குனி 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய – சமூக – இலக்கிய சஞ்சிகை

தை - பங்குனி 2016

அலை - 01 ஓசை - 01


## ஓசையினுள்ளே...


ஆசிரியர்
அருட்தந்தை றொஹான் பேர்ணாட்

இணை ஆசிரியர்
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

ஆசிரியர் குழு
சூசை எட்வேட்
செ. ஞானராசா
சுரேந்தினி மணிவண்ணன்

ஆலோசகர்
அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்

கணினி வடிவமைப்பு
F.S. தெனிஸ் ஜொய்

வெளியீடு
அலை ஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மாவட்டம்

முகவரி
சமூகத்தொடர்பு,
பொது நிலையினருக்கான ஆணைக்குழு
இல. 17, புனித அந்தோனியார் வீதி.
திருகோணமலை.

பதிப்பகம்
அஸ்ரா கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடட்
இல. 40, சிவன் வீதி,
திருகோணமலை.
026-5677502



| | |
|---|---|
| ஆசிரியரின் ஓசை | 01 |
| ஆசிச்செய்திகள் | 02 |
| தவக்கால சிந்தனை | 03 |
| இரக்கத்தின் வெளிப்பாடு | 04 |
| அருட்தந்தையரை அறிவோமா? | 07 |
| மாணவர் ஓசை | 09 |
| நன்றி கொன்றார் (சிறுகதை) | 11 |
| சமகால அரசியல்... | 13 |
| தலை நிமிர்ந்து... | 15 |
| புதிர்ப்போட்டி | 15 |
| நலம் நாடி - நீரழிவு நோய் | 16 |
| கவிதைகள் | 17 |
| மறைமாவட்டச் செய்திகள் | 18 |
| பாலர் ஓசை | 19 |
| தமிழ்த்தூது... | 20 |
| மறையுரையிலிருந்து... | 22 |
| திருச்சபைச் செய்திகள் | 24 |
| இளையோர் ஓசை | 25 |
| இலக்கிய ஓசை | 27 |



ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே. - ஆசிரியர்.



**Alai Osai Cultural Centre**
No. 17, St. Antony's Street,
Trincomalee. 026 2220077

விலை - ரூ. 50/=
ஆண்டுச் சந்தா - ரூ. 600/
(தபால் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஓசை...

அனைவருக்கும் எனது தாழ்மையான வணக்கம்.

திருகோணமலை சமூகத் தொடர்புகள் மையம் ("அலை ஓசை" கலைத் தொடர்பகம்) 2016ம் ஆண்டு தைத் திங்கள் 16ம் திகதி "திருமலை கிறிஸ்தவ கலை இலக்கிய பேரவை" என்னும் அமைப்பை உருவாக்கியது. இப் பேரவைதனை மறைமாநில ஆயர் பெருந்தகை அருட் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் அவர்கள் அன்றைய தினத்திலேயே உத்தியோக பூர்வமாக அங்குராப்பணம் செய்துவைத்தார். உருவாக்கப்பட்டுள்ள திருமலைக் கிறிஸ்தவ கலை இலக்கிய பேரவையானது இப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கிறிஸ்தவ கலை இலக்கிய ஆர்வலர்களை தனது குடும்ப உறுப்பினர்களாக உள்வாங்கிக் கொண்டு இருக்கிறாள். இதன் அடிப்படையில் இனிவரும் காலங்களில் மறை மாவட்ட ரீதியில் நிகழ்த்தப்படும் கலை இலக்கிய நிகழ்ச்சிகளை திருமலை கிறிஸ்தவ கலை இலக்கிய பேரவையே முன்னின்று நடாத்தும்.

இப் பேரவையின் ஒரு அங்கமாகவே "அலை ஓசை" சஞ்சிகை வெளிக்கொணரப்படுகிறது. "அலை ஓசை" சஞ்சிகை தனது ஜனரஞ்சக வெளிப்பாட்டை ஆரம்ப காலத்தில் காலாண்டு வாத்தியமாக நாதம் இசைப்பாள். இப் பேரவை தனது வளர்ச்சியில் ஒரு முதிர்ச்சியை காணும் பட்சத்தில் "அலை ஓசை" சஞ்சிகை நாதத்தை மாதாந்தம் இசைத்து மகிழ்விப்பாள். எனவே சமய, சமூக, இலக்கிய, பொருளாதார, அரசியல் என்னும் தளங்களில் தனக்கே உரித்தான பாணியில் நாதம் எழுப்பும் "அலை ஓசைக்கு" தாங்கள் ஒவ்வொருவரும் தங்கள் குடும்ப சஞ்சிகையாக ஏற்றுக் கொண்டு இன்னும் பலருக்கு அறிமுகம் செய்து ஆதரவு நல்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

2016ம் ஆண்டு பிறந்த மூன்றாவது மாதம் நகர்ந்து கொண்டு இருக்கும் வேளையில் இலங்கைத் திருநாட்டில் அரசியல் பல சுவாரசியமான கட்டங்களை தொட்டுச் செல்கிறது. அந்த வகையில் "நல்லாட்சி" (?) அரசாங்கத்துக்கு விசமிகள் பல சவால்களையும், அச்சுறுத்தல்களையும், தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் முடக்கிவிட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றிற் கெல்லாம் காரணம் தங்களது ஆட்சிக்காலத்தில் அரங்கேற்றிய அராஜகங்களையும், அடக்குமுறைகளையும், ஊழல்களையும் குடும்ப ஆதிக்க வெறிக்கு எதிராக பூதாகரமாக கிளம்பியுள்ள தட்டிக்கேட்கும் படலத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரோபாயமாகும்.

அருளின் காலமாகிய தவக்காலம் எமக்குத் தரப்பட்டுள்ள பொற்காலமே. இவ் இரக்கத்தின் ஜீபிலி ஆண்டில் எமது இதயங்களைக் கிழித்துப் பரிசோதித்து பிறர் நலத்தில் மாத்திரமே நாட்டம் உடையவர்களாக இருக்கும் வண்ணம் சீர் செய்து கொள்வோம். ஒறுத்தல் முயற்சிகள் எமது தனிப்பட்ட ஆன்மீக வாழ்விற்கு கைவிடப்பட்டவர்கள், அநாதைகள், ஏழைகள், வாழ்க்கையிலே சந்தோஷமின்றி வாடுபவர்கள் போன்றோருக்கு எழுச்சியை கொடுக்க முடிகிறதா எனவும் சிந்திப்பது சிறந்ததுவே. இருப்பினும் எமது அக இருளை அகற்றவும் பிறர் வாழ்வில் ஒளி ஏற்றவும் உயிர்த்த இயேசுவோடு ஐக்கியமாகவும் எமக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது செபமே. ஆகவே அனுதின செபத்தால் எக்காரியத்தையும் வெல்ல முடியும் என்பது எமது தார்மீக மந்திரமாக ஓசை எழுப்பட்டும் எனது இனிய அலை ஓசை வாசகப் பிரியர்களே!


- ஆசிரியர் -

**மறை வார்த்தை:** **"இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடி கொண்டிருந்தால் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச்செய்வார்."** (உரோமர் 15:21,22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்திகள்




## மறை மாநில ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை

திருகோணமலை மறைமாவட்டம் புதிய மறைமாவட்டமாக உருவாகி மூன்று வருடங்களாகின்றன. எமது வளர்ச்சியில் சிறிது சிறிதாக நாம் மேற்கொள்ளும்முயற்சிகளில் ஒன்றாக சமூகத் தொடர்பாடல் நிலையத்தின் இன்னுமொரு முக்கிய அம்சமாக அதன் காலாண்டு சஞ்சிகை வெளிவருகின்றது. இதன் முதல் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி எழுதுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தொழில்நுட்பம் இமயம் போல வளர்ந்திருக்கின்ற இக்காலத்தில் வளரும் சமூகம் தமது ஆற்றல்களை இனம்கண்டு அதை வளர்ப்பதிலும் புதிய படைப்புகளை வெளியிடுவதிலும் ஆர்வம் கொண்டுள்ளது. அதேவேளை வேகம் எனும் மனநிலை இன்றைய சமூகத்தை ஆட்டிப் படைக்கின்றது என்பது ஒரு குறையாகவே உள்ளது. அனைத்தும் குறுகியதாக, சுருக்கமாக, சுவாரஷ்யமாக அமைந்திருக்க வேண்டும் எனும் எண்ணம் மக்கள் மத்தியில் உருவாக அதற்கேற்ப படைப்பாளிகளும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

விசேடமாக எழுத்துத் துறையை எடுத்துக்கொண்டால் நீண்ட கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், சரித்திர விளக்கம் போன்றவற்றை வாசிக்க மக்களுக்குப் பொறுமையுமில்லை, நேரமுமில்லை. 20 வருடங்களுக்கு முன்பு 1000 வலைப்பின்னல்கள் உலகில் இருந்தன. ஆனால் இன்று 650 மில்லியன் மக்கள் வலைப்பின்னலைப் பார்க்கக்கூடிய வளர்ச்சியை உலகம் கண்டுள்ளது. "மக்களுக்கு என்ன சொல்ல வேண்டும்?" எனும் நிலைமாறி "எம்மிடமிருந்து மக்கள் எதை அறிய விரும்புகிறார்கள்?" என்றறிந்து அதற்கேற்பவே உலகம், தொடர்பாடல்கள் மாறிக்கொண்டு வருகின்றது. இதில் நல்லதும் உள்ளது, மக்களை தீய வழிக்கு இட்டுச் செல்லக்கூடிய ஆபத்தும் உள்ளது.

(தொடர்ச்சி 19ம் பக்கத்தில்..)



## முன்னாள் ஆயர் அதி.வண. கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை

அன்பார்ந்த மக்களே!

திருகோணமலை மறைமாவட்டத்தில் இயங்கும் சமூகத் தொடர்புகள் நிலையம் தனது படைப்பாக "அலை ஓசை" என்னும் சஞ்சிகையை வெளியிடுகிறது. கன்னி இசையாக ஒலித்து வெளிவரும் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் நல்கி நிற்கின்றேன். நவீனயுகமாகிய இக் காலத்தில் வாசிப்புப் பழக்கம் மக்களிடையே அருகி வருகிறது. குறும் செய்திக்கு பழகப்பட்டுக் கொண்டிருக்கும் சமூதாயம் நீண்ட பக்கங்களையுடைய செய்திகளையோ கட்டுரைகளையோ கதைகளையோ வாசிக்க ஆர்வம் காட்டுவதில்லை. எனவே இக் காலகட்டத்தில் ஒரு சஞ்சிகையை வெளியிட்டு அதனை கொண்டு நடாத்துவது என்பது சிறமமான பணியே.

இருந்தும் சமய சமூக இலக்கிய சஞ்சிகையாக "அலை ஓசை" வெளிவருவது பாராட்டதற்குரியதே. அந்த வகையில் இச் சஞ்சிகையின் பிரதன ஆசிரியரையும் அதன் ஆசிரியர் குழமத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது. திருகோணமலை மறை மாவட்டத்தின் முன்னை நாள் ஆயர் என்ற வகையில் இச் சஞ்சிகை வெளி வருவதை இட்டு மகிழ்ச்சி அடைவதோடு எனது நல் ஆசிகளையும் செபத்தினையும் நல்கி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவக்கால சிந்தனை

*தியாக்கோன் பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன்.*

தவக்காலம் என்பது அருளின் காலம், இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட ஓர் உன்னத காலம். எமது பாவத்திற்காய் மரித்து கிறிஸ்து யேசுவோடு புதிய வாழ்விற்கு உயர்த்திட இக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

தவக்காலம் என்று சொன்னவுடனேயே நாம் ஒறுத்தல் முயற்சிகள், சிலுவைப்பாதை, ஒப்புரவு அருட்சாதனம் போன்றவற்றை எம் மனக்கண் முன்னிலையில் கொண்டு வருகின்றோம். தவக்காலம் என்பது வெறுமனே பக்தி முயற்சிகளிலோ, வழிபாடுகளிலோ பங்கெடுப்பது மட்டுமல்ல மாறாக அவற்றின் ஊடாக மாற்றத்தை தம் வாழ்வில் கொண்டு வருவது இன்றியமையாத அம்சமாக காணப்படுகின்றது.

தவக்காலத்தின் முடிவில் யாராவது நான் இத்தனை சிலுவைப்பாதைகள் செய்தேன், இத்தனை நாட்கள் ஒருசந்தி அல்லது உபவாசம் இருந்தேன் என்று பெருமை பாராட்டிவிட்டு மனம் மாற்றத்தை (தீமையில் இருந்து நன்மையை, வெறுப்பில் இருந்து நேசத்தை, கோவத்தில் இருந்து பாசத்தை) பெறாவிடில் அவர் நல்ல முறையில் தவக்காலத்தை வாழவில்லை என்பதே பொருள்.

இந்த தவக்கால முயற்சிகள் எமக்கு தேவை. ஆனால் அவற்றின் முக்கியத்துவத்தை, நோக்கத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மனிதன் தமது பாவ வாழ்வினால் இறைவனை விட்டு பிரிந்து சென்றாலும், அவர் மனிதன் மீது அளவு கடந்த அன்புள்ளவராகக் காணப்படுகின்றார், அவனைத்தேடி வருகிறார். அவன் மனம்திரும்பி அவரிடம் வரும் போது, அவர் அவனை அன்போடு அரவணைக்கிறார் என்பதை தவக்காலம் எமக்கு நினைவுபடுத்துகிறது.

தவக்கால வாசகங்கள் பற்றிப் பார்க்கிற போது அவை பழைய ஏற்பாட்டிலே இறைவன் மனிதனை எவ்வாறு அன்பு செய்தார் என்பதையும், புதிய ஏற்பாட்டில் எம் மீட்பர் இயேசுவினூடாக எவ்வாறு அவர் எம்மை அன்பு செய்தார் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "எம் ஆண்டவர் யேசு தம் இறைத்தன்மையை விட்டு விட்டு மனிதராகி எம்மில் ஒருவராக அவர் மனுவுருவெடுத்தார். தம் தந்தை மீதும் கொண்ட அன்பினால் தம்மையே சிலுவையில் பலியாக்கினார். எனவே நாம் எமது சுயநலத்தை விட்டு எம் அயலான் மீது அன்பு செலுத்த வேண்டும்" என்று கூறுகின்றார்.

இறையன்பைப் பற்றி நாம் தியானிக்கும் போது பிறரன்பு உள்ளளவர்களாக நாம் மாறுவோம். எனவே, தவக்காலத்தின் நோக்கமும், தவமுயற்சிகளின் நோக்கமும் எமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகும். இறையன்பை அனுபவிக்கும் நாம் இக்காலத்தின் இறுதியில் பிறரன்பு உடையவர்களாக மாறவேண்டும்.

ஆகவே, மாற்றத்தை நோக்கிப் பயணிப்போம், இறையன்பிலும் பிறர் அன்பிலும் சங்கமிக்க முயற்சி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரக்கத்தின் வெளிப்பாடு



நேஷானி யேசுராசன்


எமது பாப்பரசரின் தலைமையில் இவ் ஆண்டு ''இரக்கத்தின் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பங்கிலும் அதனைக் கடைப்பிடித்து வருகின்ற சந்தர்ப்பத்தில் இக் கட்டுரை வாயிலாக இரக்கம் குறித்து எனது கருத்துக்களை முன்வைக்கின்றேன் முதலில் இரக்கம் குறித்து எமது கருத்து என்ன? இரக்கம் என்றால் என்ன? என்பதை எம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்ப்போம்.

இரக்கம் என்பது "பிறர் துன்ப நிலை கண்டு வருந்துதல்" என்று பொருள்படும். இதனை கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் நினைவிற் கொள்ள வேண்டும். இவ் இரக்கமானது இறை வாழ்வில் இறைவனிலிருந்து இயேசு வழியாக அருளப்பட்டு இறைவார்த்தைகளின் பிரசன்னத்தில் எமக்கு முன் மாதிரியான வழிகாட்டலை தந்து கொண்டிருக்கின்றது. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்து இயேசு பிறர் மீது காட்டிய இரக்கத்தை மற்றவர்கள் மீதும் காட்ட வேண்டும்.

தற்பொழுது இரக்கத்தின் வெளிப்பாட்டை விவிலியத்தினூடான வார்த்தைகள் வழியாக எமது வாழ்விற்குள் கொண்டு வருவோம். ஆரம்பத்தில் இரக்கமானது இறைவனால் பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் வெளிப்படுத்தப்பட்ட போதும் சிறந்த சில சம்பவங்களை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

ஆதியில் ஆபிரகாமிற்கு அவரது வாழ்வின் மீது இறைவனின் இரக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது. ஆபிரகாம் தனக்கோ ஒரு குழந்தை இல்லை என்று புலம்பும் போது இறைவன் அவரோடு உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்கிறார். (தொட.நூல் 15:5 ல்) "வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் இவ்விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பார்'' என்றார். வயது முதிர்ந்த ஆபிரகாமிற்கும் அவர் மனைவி சாராக்கும் ஒரு மகனை கொடுப்பேன் "அவனுக்கு ஈசாக்கு எனப் பெயரிடுவாய்" (தொட. நூல் 17:19) என்ற இறைவனின் வார்த்தை நிறைவேறியது, குழந்தையும் பிறந்தது. தொட.நூல் 21:1-3ல் நாம் பார்க்கலாம். இறைவன் மலடியான சாரா மீது இரக்கம் கொண்டிருந்தார். அந்த இரக்கத்தின் வெளிப்பாடு ''ஈசாக்கு'' குழந்தைகள் இல்லை என்ற சாராளின் துன்ப மன்றாட்டிற்கு இறைவன் ஏற்ற காலத்தில் பதில் அளித்தார். இறைவன் மலடிகளையும் நேசிக்கின்றார் என்பது இதில் விளங்குகின்றது.

இப்படியாக விவிலியத்தில் பயணம் செய்து வருகையிலே விடுதலைப்பயணம் நூலில் ஆண்டவரின் மாபெரும் இரக்கம் வெளிப்படுகின்றது. இங்கு கடவுள் ஒருவரை குறித்து மட்டும் இரக்கம் காட்டவில்லை மாறாக எகிப்தில் அடிமை வாழ்க்கை வாழ்ந்த இஸ்ராயல் சனங்கள் முழுவதிலும் தமது இரக்கத்தினை வெளிப்படுத்தினார். அவ் இஸ்ரவேயல் மக்களை வழிநடத்த ஆண்டவர் மோசேயை தேர்ந்தெடுத்தார். மோசேக்கு ஆண்டவர் எரியும் முட்புதர் வழியாக பேசினார் "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன் அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்: ஆம் அவர்களின் துன்பங்களை நான் அறிவேன்" (விடுதலைப்பயணம் 3:7) என்று கூறி அவர்களின் துன்பப்பிடியிலிருந்து இஸ்ராயலை மீட்க மோசேயை அனுப்பினார். அவ்வாறே இறைவன் ஏரோது மன்னனின் அடிமை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலிருந்து இஸ்ராயல் மக்களை விடுவித்து ஒளியின் வாழ்விற்கு அழைத்துச் செல்கின்றார். அங்கு ஏறத்தாழ ஆறு லட்சம் பேரும் அவர்களின் கால்நடைகளும் புறப்பட்டுச் சென்றன. அப்போது இறைவன் அவர்களை செங்கடல் வழியாக இரவில் நெருப்புத்தூணாகவும், பகலில் மேகத்-தூணாகவும் (விடுதலைப் பயணம் 13:21-22) உலர் நிலத்தின் பாதையில் கடல்நீர்த்திரள்கள் அவர்களுக்கு பெரும் சுவராக இரு புறமும் நிற்க ஆண்டவர் அவர்கள் முன்னிலையில் வழிநடத்தி சென்றார். (விடுதலைப்பயணம் 14:21-22) இறைவன் அவர்களை நானூற்று முப்பது ஆண்டுகள் அடிமை வாழ்க்கையிலிருந்து தமது பேரிரக்கத்தால் அவர்களை வழிநடத்திச் சென்றார். கடவுள் அடிமைகள் மீதும் இரக்கம் கொண்டுள்ளார். இஸ்ராயலின் அழுகை, கூக்குரல் இறைவனின் உள்ளத்தில் இரக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு மாபெரும் விடுதலையினைக் கொடுத்துள்ளது என்பது இறைவார்த்தை-களூடாக வெளிப்படுகின்றது.

இரக்கத்தின் இருப்பிடம் இறைவன் ஆவார். அதாவது பிறர் துன்ப நிலை கண்டு வருந்துதல் ஆகும். இவ்வாறு புதிய ஏற்பாட்டு நூல்களில் நம் இயேசு கிறிஸ்துவும் எமக்கு முன்மாதிரியாக உள்ளார். இறைவன் தம் மக்கள் மீது கொண்ட அளவற்ற அன்பினாலும் இரக்கத்தினாலும் தம் ஒரே மகன் இயேசுவை இவ் உலகிற்கு அனுப்பினார். இயேசுவோ பல இடங்களில் இரக்கத்தை தம் அன்பான மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதன் நோக்குவோம்.

இயேசுவின் இரக்கத்தை அறிய தொடர்ந்து செல்கையில் மாற்கு முதலாம் அதிகாரம் 40 - 45 வசனங்களில் உடலில் அருவருப்பான புண்களோடு பிறரால் ஒதுக்கி வைக்கப்பட்ட தொழு நோயாளரது நோய்களைக் கூட அவர் குணமாக்கினார். "இயேசு அவர் மீது பரிவு கொண்டு தம் கையை நீட்டி அவரைத் தொட்டு நான் விரும்புகின்றேன் உமது நோய் நீங்குக" என்றார் (மாற்கு 1: 41) அவ்வாறே தொழுநோயாளரும் நலம் அடைந்தனர். இயேசுவின் பரிவிரக்கம் அவர்களை நோயிலிருந்து விடுவித்துள்ளது.

பழைய ஏற்பாட்டு சட்டங்களுக்கு அமைவாக நடக்க வேண்டும், தூயவராக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற மனநிலை கொண்ட யூதத் தலைவர்கள் பாவிகள், நோயாளிகள், ஏழைகள், கைவிடப்பட்டோர், விதவைகளை வெறுக்கவும் ஒதுக்கவும் செய்தார்களே தவிர இரக்கம் காட்டவில்லை. மாறாக இயேசுவோ அவர்களின் மனநிலைக்கு எதிராக செயல்பட்டார். அனைவர் மீதும் இரக்கம் காட்டினார் புறம் தள்ளப்பட்டவரை அரவணைத்து அணைத்துக்கொண்டார். இயேசு பல இடங்களில் தம் பேரிரக்கத்தால் பேய்களை ஒட்டினார், நோய்களை குணமாக்கினார், இறந்தோரை எழுப்பினார் மற்றும் அற்புதங்களைச் செய்தார். ஆனால் இரக்கம் காட்டிய இயேசுவிற்கு கிடைத்தது என்ன? மக்களின் புறக்கணிப்பும், தூற்றுதல் பழிச்சொற்களும் இவற்றிற்கு மேலாக அவருடன் இணைந்து அவரைப்பற்றி அறிந்த இயேசுவின் சீடனான யூதாசால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டார், பேதுருவால் இயேசு மூன்று முறை மறுதலிக்கப்பட்டார். இறுதியில் மக்களினால் இயேசுவிற்கு கிடைத்த பரிசு சிலுவைச் சாவு ஆகும். அந்த மரண வேளையிலும் கூட இயேசு அவர்கள் மீது கோபம் கொள்ளவில்லை மாறாக "தந்தையே இவர்கள் அறியாமல் பாவம் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என்று தான் கூறினார். இவ்வாறு இயேசு எம் ஒவ்வொருவரிலும் இரக்கம் கொண்டுள்ளார் என்பது அழகாக இவ் இறைவார்த்தை ஊடாக வெளிப்படுகின்றது. மனிதனைத் தேடி இறைமகன் மனிதனானார் ஆனால் அவர் தேடி வந்தவரோ அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. இருந்தும் மனிதர் ஆயனில்லா ஆடுகளைப் போல் இருப்பதை கண்டு கடவுள் இரக்கம் கொண்டார்.

இவ்வாறு இரக்கத்தை வெளிப்படுத்திய இயேசு நாம் எவ்வாறு பிறர் மீதும் அவர்களின் மீதும் அவர்களின் துன்பநிலையைக் கண்டும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதற்கு சில உவமைகளை எடுத்துக் கூறுகின்றார். இதற்கு சிறந்த உதாரணமாக (லூக்கா 10:22) வசனம் "நல்ல சமாரியன்" என்ற உவமை வாயிலாக சமாரியன் செய்த இரக்க செயல் எடுத்துக்காட்டப்-படுகின்றது. "சமாரியன் அந்த காயப்பட்டவரை கண்டு பரிவு கொண்டார்" (லூக்கா 10:33) வெளிப்படுத்துகின்றது. சமாரியன் அவரை அணுகி காயங்களில் திராட்சை மதுவும் எண்ணையும் வார்த்து அவரை சாவடிக்கு கொண்டு சென்று பார்த்துக் கொள்ளும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவனிடம் கூறினார். இதை கூறிய இயேசு திருச்சட்ட அறிஞர்களைப் பார்த்து "கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம் மூவருள் எவர் அடுத்திருப்பவர்?" என்று கேட்ட போது அதற்கு திருச்சட்ட அறிஞர்கள் "அவருக்கு இரக்கம் காட்டியவரே" என்றுரைத்த போது இயேசு கூறுகிறார் "நீரும் போய் அப்படியே செய்யும்" என்றார்.

இவ்வாறு இரக்கத்தை இல்லாதவருடன் பகிர்ந்து கொள்வதால் எமக்குள் மகிழ்ச்சி பெருகின்றது. நம் மத்தியில் எத்தனையோ சகோதர சகோதரிகள் கஷ்டம், வறுமையின் வட்டத்திற்குள் உணவு இன்றி, உடையின்றி தவிக்கின்றனர். நாம் அவர்களிடம் எம்மிடம் இருப்பவற்றை பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும். இதற்கு இயேசு கூறுகிறார் ''இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவருடன் பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவன் அவ்வாறே செய்யட்டும்" என்றார் (லூக்கா 3:11). நாம் இவர்களுடன் பகிர்ந்து வாழும் போது அவர்கள் வழியாக இறைவனைக் காணலாம் என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். நாம் பிறருக்கு இரக்கம் காட்டினால் எம் துன்ப வேளையிலும் இன்னொருவர் இரக்கம் காட்டுவார். இதற்கு மத்தேயு 7:7-11 வசனத்தில் ''பிறர் உங்களுக்கு செய்ய வேண்டும் என விரும்புவதை எல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்''.

இறுதியாக லூக்கா 10:27ம் வசனத்தில் ''உம் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக'' என்று கூறுவது போல நாமும் இவ் இறை இரக்கத்தின் ஆண்டில் உண்மையான இரக்கத்தை எம் சகோதரிகளுடன் பகிர்ந்து வாழ முன்வருவோம், விண்ணக தந்தையின் இரக்கத்தைப் பெறுவோம்.

"இரக்கமுடையோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்"
*(மத்தேயு 5:17)*

## சந்தேக பாப்பாவும்... சங்கேத தாத்தாவும்...

**"நல்லாட்சி எண்டா என்ன தாத்தா?"**

**''பிடிக்கிற மாதிரி பிடித்து பிடியாத மாதிரி விட்டு, அடிக்கிற மாதிரி அடித்து அடியாத மாதிரி அணைத்து, விடுற மாதிரி விட்டு விடாத மாதிரி அடைத்து ஆளை அலைக்களித்து ஆட்சிசெய்வது மகளே!''**



## வரவேற்கிறோம்...

திருகோணமலை, புனித குவாட்டலுப்பே பங்கைச் சேர்ந்த அருட் சகோதரர் பற்றிக் ஸ்பாக்ஸ் றொய்சன் (தியாக்கோன்) அவர்கள் எதிர்வரும் 2016.04.09ம் திகதி திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் அதி.வண.ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களினால் குருவாக திருநிலைப்படுத்தப் படவுள்ளார்.

பற்றிக் ஸ்பாக்ஸ், ஆரோக்கியம் ஆகியோரின் மகனும், ரெபேக்கா, ரெக்கிலின் ஆகியோரின் சகோதரனுமாவார். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை திருகோணமலை புனித சூசையப்பர் தேசிய கல்லூரியில் பயின்றார். இவர் உயர்தர கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய கல்லூரியில் தொடர்ந்தார்.

2001.01.14 இல் சிறிய குருமடத்திற்கு அழைக்கப்பட்ட இவர் களுத்துறையிலுள்ள இடைநிலை குரு மடத்திற்கு 2007.06.21ம் திகதி பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். 2008 - 2015 வரை கண்டி அம்பிட்டிய பெரிய குருமடத்தில் மெய்யியல் பீடக் கல்வியைப் பூர்த்தி செய்தார். அதே குரு மடத்தில் 2011 - 2015 வரை இறையியல் பீடக்கல்வியையும் பூர்த்தி செய்தார். தனது மேய்ப்புப் பணி அனுபவத்தினை மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திலும் (2010 - 2011) பின்னர் சொறிக் கல்முனை திருச்சிலுவை திருத்தலத்திலும் (2010 மார்ச் - 2011 செப்டம்பர்) நிறைவு செய்திருந்தார்.

ஆதி.வண. ஆயர் மல்கம் கார்டினல் ரஞ்சித் ஆண்டகை அவர்களினால் கடந்த 2015.10.14ம் திகதி திருத் தொண்டராக திரு நிலைப் படுத்தப்பட்டார். அன்றிலிருந்து திருகோணமலை புனித மரியாள் போராலயதத்தில் திருத்தொண்டராகப் பணியாற்றி வருகிறார்.

அருட்தந்தையாக திருநிலைப்படும் அருட்சகோதரர் றொய்சன் ஸ்பாக்ஸ் அவர்கள் குருவாக இறைவாழ்விலும் இறை பணியிலும் சிறந்து விளங்க ''அலை ஓசை'' குடும்பத்தினர் வாசகர்களோடு இணைந்து வரவேற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்தந்தையரை அறிவோமா...?






**வணக்கம் ஆயர் அவர்களே... ஆயர் நிலைக்கு தாங்கள் இறைவனால் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு "அலை ஓசை குடும்பம்" தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. ஒவ்வொரு "அலை ஓசை" இதழிலும் அருட்தந்தையர்களை நேர்கண்டு கருத்தறியும் ஒழுங்கமைப்பின் கீழ் முதலில் தங்களை நேர் காண்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.**

1. **தங்களது தாய், தந்தை, சகோதரங்களைப் பற்றி அறிய விரும்புகிறோம்.**

எனது தந்தை ஜோக்கிம் இம்மானுவேல். நில அளவையாளர். 1993ல் காலமானார். எனது தாய் டொனற்றா மேர்சி இம்மானுவேல். இவருக்கு தற்போது 83 வயது. நாம் 11 சகோதர சகோதரிகள். ஒருவர் சிறு வயதிலேயே இறந்து விட்டார். எனது கடைசி தங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் இணைந்து தற்போது குவைத் நாட்டில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். எமது சகோதர சகோதரிகள் அனைவரும் வெளிநாட்டில் குடியேறியுள்ளனர். இவர்கள் எனது குருத்துவ வாழ்வில் பக்க பலமாக இருக்கிறார்கள்.

2. **நன்றி ஆயரவர்களே... தங்களின் இளமைப் பருவத்தில் நடைபெற்ற சுவாரஷ்யமான சம்பவங்களை அலை ஓசை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

சிறுவயதில் பீடப்பணியாளர்களாக தூய மரியாள் பேராலயத்தில் செயற்பட்ட போது உதவிப்பங்குத் தந்தையர்களாக இருந்த அருட்பணி சந்திரா பெர்ணாண்டோ, அருட்பணி தியாகராஜா எம்மை பெரிதும் உற்சாகமூட்டினார்கள். விசேடமாக அருட்பணி தியாகராஜா வேட்டையாடுவதில் வல்லவர். அவரோடு இணைந்து வெல்வேரி, உப்பளம் (நிலாவெளி) போன்ற இடங்களுக்கு சென்று வேட்டை-யாடியதும் காட்டுப் பழங்கள் பறித்ததும் மறக்கமுடியாத அனுபவங்களே.

3. **தங்களுக்கு குருத்துவ அழைத்தல் இருப்பதை எவ்வாறு அறிந்து கொண்டு அவ் வாழ்வை நோக்கிப் பயணித்தீர்கள்?**

நான் சிறுவனாக இருந்தபோதே எதிர்காலத்தில் குருவாக வந்து பணிசெய்ய வேண்டும் என்று அடிக்கடி கூறுவதுண்டு. இதை எனது பெற்றோர் நான் வளர்ந்த பின்பும் நினைவூட்டுவார்கள். இந்த சிந்தனையும் குருக்களோடு இருந்த தொடர்புகளும் எதிர்காலத்தில் நல்ல குருவாகி பணிசெய்ய வேண்டும் எனும் ஆர்வத்தை எனக்குள் தூண்டியது. விசேடமாக எமது பெற்றோரின் விசுவாச வாழ்வும் பங்குப்பணிகளில் அவர்களது ஈடுபாடும் என்னையும் பணிவாழ்விற்குத் தூண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. தங்களுடைய முப்பது வருட குருத்துவ வாழ்வில் எதிர்கொண்ட சவால்களுக்கு எவ்வாறான தீர்வுகளை கண்டு கொண்டீர்கள் என்பதை தெரிவிக்க முடியுமா?**

எனது முப்பது வருட வாழ்வில் மலை போன்று சவால்களை நான் எதிர்கொண்டதில்லை எனலாம். அதற்கு காரணங்கள் சில.

♦ எங்கு அனுப்பப்பட்டாலும் திறந்த மனதோடும், எப் பணி கொடுக்கப்பட்டாலும் விருப்பத்தோடும் ஏற்று செயற்படுவது.

♦ எதிர்கொள்வது சவாலாக இருந்தாலும் அழைத்த ஆண்டவர் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான பலத்தையும் ஞானத்தையும் தருவார் என்னும் நம்பிக்கை.

யுத்த காலங்களில் மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பங்கில் பணி செய்தது பெரும் சவால் என்று கருதுகிறேன். கிழமை நாட்களில் மறைக்கல்விப்பணி, சனி, ஞாயிறு தினங்களில் பங்குப்பணி. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து விடுவிக்கப்படாத பகுதிக்குச் சென்று பணி செய்யும் போது இரு பகுதியினரும் என்னை சந்தேகக் கண்ணோடு பார்த்தார்கள். ஆயினும் நான் யாரையும் சார்ந்து செயற்படவில்லை. அதனால் இறைநம்பிக்கையோடு சென்று திருப்தியோடு பணிசெய்தேன்.

**5. தங்களுடைய ஆயத்துவ திருப்பொழிவு நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அத் தருணத்தில் தங்களது மனநிலை எவ்வாறிருந்தது?**

ஆயராக திருப்பொழிவு பெற்றதும் அதனோடு தொடர்புபட்ட அனைத்து ஆயத்தங்களும் எல்லாருக்கும் ஆழமான அனுபவம். இது எமது மறைமாவட்டம். எனவே ஒன்றுபட்டு சிறப்பாக ஆயத்தங்களை செய்ய வேண்டுமென குருக்கள், துறவறத்தவர், பொதுநிலையினர் அனைவரும் செயற்பட்டார்கள். அனைவரினதும் ஈடுபாடு, அர்ப்பணம், பங்களிப்பு பாராட்டுதற்குரியது. ஒவ்வொரு விடயமும் நுணுக்கமாக பார்க்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. பங்கு பற்றிய அனைவரும் பாராட்டிச் சென்றார்கள்.

எனது பெயர் அறிவிக்கப்பட்டதிலிருந்து எனது சிந்தனையெல்லாம் இவ் ஆயத்தங்களில் அனைவரும் பங்களிக்க வேண்டும். இது எமது கொண்டாட்டம் எனும் உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். அதேபோல நாம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்குசெய்து நடாத்துவதன் மூலம் அடுத்தவர்க்கு சிறந்த உதாரணமாக இருக்க வேண்டும்.

இப் பின்னணியில் திருப்பொழிவு நிகழ்ச்சியின் இறுதியில் நான் மகிழ்ந்த சில விடயங்கள்:

♦ எமது மறைமாவட்டம் எனும் உணர்வு எமக்குள் உருவாகியது.

♦ சிறிய மறைமாவட்டம், புதிய அனுபவமானாலும் ஒன்றுபட்டு, திட்டமிட்டு செயற்படும் போது நாம் பலவற்றை சாதிக்கலாம்.

♦ இதே மனநிலையோடு மறைமாவட்டத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லலாம்.

**6. பல்லின மக்கள் வாழும் திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து சமூகத்தினராலும் மதிக்கப்படுகின்ற தங்களது பணி எவ்வாறாக அமையப் பெறவுள்ளது?**

தொடக்கத்திலிருந்தே நான் குறிப்பிட்டதைப் போல எனது மேய்ப்புப்பணியின் மூன்று முக்கிய விடயங்கள்: மறைமாவட்டத்தின் ஆன்மீகம், கல்வி, சமூகப்பணி. இதில் மறைமாவட்டத்தின் ஆன்மீகம் என்பது முதன்மையானது. கல்வியும் சமுகப்பணியும் கத்தோலிக்கர் எனும் நிலையையும் கடந்து அனைத்து சமூகத்தினருக்கானது.

திருகோணமலை பல சமய, பல்லின மக்கள் வாழும் இடம். இதில் மக்களுக்கு பணி செய்ய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அனைவரும் ஒன்றித்த சமாதானத்துடனும் ஒப்புரவுடனும் வாழ சமூகப்பணி சிறந்த வழியாகும். பிறர்நலம் கருதி ஒன்றுபட்டு செயல்படுவோம்.

நன்றி ஆயர் அவர்களே...!

நேர்கண்டவர்: கிறிஸ்டி முருகுப்பிள்ளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ நாகரிகம் க.பொ.த. (உ/த)

## மாணவர் ஓசை

சுரேந்தினி மணிவண்ணன்





**நாகரிகத்தின் தோற்றம்:**

நாகரிகம் என்பது (Civilization) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகும். இது (Civitas) நகரம் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உருவாகியது. CITIZEN என்பது நகர வாசிகளைக் குறிக்கும் - இதில் இருந்தே civilization என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது. இது நகரவாசிகளின் வாழ்வியலைக் குறித்து நிற்கிறது. இதனை நகர் அகம் எனப் பிரித்து நோக்கலாம். நகர் என்ற சொல்லுக்கு நகரம், மண்டபம், அரண்மனை, கோயில் எனப் பல பொருள்கள் உண்டு. அது நகர்ப் புறங்களில் வாழும் மக்களின் வாழ்வியல், வாழ்க்கை முறை என்பவற்றைக் குறிக்கிறது என தேவநேயப்பாவாணர் எனும் ஆசிரியர் கூறுகிறார்.

நாகரிகமானது நகரத்தோடு இணைந்து, வாழ்வின் எல்லாக் கூறுகளையும் விடயங்களையும் உள்ளடக்கியதான நிலையில் நோக்கப்பட்டு நகர வாசிகளின் வாழ்வியலைக் குறிக்கும் சொல்லாக மாறியது. நகரவாசிகளின் வாழ்வியலைக் குறிக்கும் இச்சொல்லானது, நாகரிகம் அடைந்த, நகர வாழ்வியலில் வளர்ச்சி பெற்ற விவசாயம், அதன் பின்னணியில் தோன்றிய பல்தொழில் துறைகள், வர்த்தகத் தொடர்புகள், அதற்கான ஊடகங்கள், நிர்வாக சீர் முறைகள், முறைசார், முறைசாராக் கல்வி வளர்ச்சி, நுண்கலை வளர்ச்சி, குறிப்பாக எழுத்துக்கள் வடிவம் பெறல், எண்கணித தோற்றம், வானியல் அறிவு போன்ற இன்னோரன்ன விடயங்களைத் தன்னகமாய்க் கொண்டு காணப்படும். நாகரிகமானது ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலேயே தோற்றம் பெற்றுள்ளது. குறிப்பாக கி.மு 5000 ஆண்டுகளில் எகிப்து, மொசப்பதேமியா, பபிலோனியா நாகரிங்கள் நைல்நதி, யூப்பிரடீஸ் - தைக்கிரீஸ் ஆற்று வெளிகளிலும், கி.மு 3000 ஆண்டுகளில் சிந்துவெளி நாகரிகம், சிந்து நதியை அடுத்த பகுதிகளிலும் தோன்றியது. இவ்வாற்றுப்-பள்ளத்தாக்குகளில் நீர் வளமும், நில வளமும் சிறந்து விளங்கியமையால் உழவுத்தொழில் செழித்தோங்கியது. தேவைகளுக்கு மிகுதியாக உணவுப் பொருற்கள் விளைந்தன. இதன் பின்னணியில், விவசாயத்துடன் தொடர்புடைய தச்சு, இரும்பு வேலைகள் முதலிய பல தொழில்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன.

**நாகரிகத்தின் வரைவிலக்கணம் :**

நாகரிகம் என்பது நகரத்தோடு இணைந்தது. நகர அமைப்பைத் தேவைக்கும் கலையுணர்விற்கும் பொருந்த அமைத்தல் பிறரோடு நன்முறையில் பழகுதல் உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுகாதாரப் பழக்கவழக்கங்-களைக் கையாளுதல் போக்குவரத்திற்கான ஊர்திகள் பொது வாழ்விற்கான நிறுவனங்களை உருவாக்கிச் செம்மையுறக் கையாளுதல் பொருளாதார சீரமைப்பு அரசியற் கட்டமைப்பு நீதி நிர்வாகச் சீர்மை எனப் பல்வேறு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது என வரைவிலக்கணப்படுத்தலாம். இருப்பினும் நாகரிகம் பற்றிய கருத்துக்கள் காலத்திற்கேற்ப மாறி வருகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அடிமை முறை, குடியேற்ற நாடுகளைச் சுரண்டுதல் போன்றவை நியாயமானவையாகக் கருதப்பட்டன. ஆனால் இன்று சுதந்திரமும் - சனனாயகமும், சமத்துவமும், சமபங்கேற்பும், சுய நிர்ணயமும் நாகரிகத்தின் இயல்புகளாகக் கருதப்படுகின்றன. இன்றைய போர்முறை, இயற்கை வளத்தை வீணாக்குதல், மனித வளச் சுரண்டல் என்பன அநாகரிகப் பழக்கங்களாகக் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்பாட்டின் தோற்றம் :**

பண்பாடு என்ற தமிழ்ச் சொல் "culture" என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகும். "culture" என்ற ஆங்கிலச்சொல் "cultura" என்ற இலத்தின் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். "cultura" என்ற இலத்தீன் பெயர்ச் சொல் "colere" என்ற வினைச் சொல்லின் அடியில் இருந்து தோன்றியது. அது விவசாயத்துடன் தொடர்புடைய ஒரு சொல். "பண்பாடு" எனும் பெயர்ச்சொல் பண்ணுதல் என்னும் வினைச்சொல்லில் இருந்தே பிறந்ததாகும். "பண்பாடு" என்பது "பண்" என்ற வினை அடியையும் "பாடு" என்ற தொழிற் பெயர் விகுதியையும் கொண்டு உருவாகியது. அதாவது பண் - செய் எனவும், பாடுசெய்தல் எனவும் பொருள்படும். உள்ளப் பண்பாடே பண்பாடு எனும் பதத்திற்கு நிறைவான பொருளைக் கொடுத்தது. விவசாயத்திற்கு நிலத்தைப் பண்படுத்தல் போல, மனித வாழ்விற்கு உளப் பண்படுத்தல் அவசியமானதாகும். பண்பாடே நாகரிதத்தின் அடிப்படையாகும். இப்பண்பாடானது, அது தோன்றிய மண்ணிற்கும், அம்மண்ணில் வாழும் அனைவருக்கும் உரியதாகும். அத்தோடு அம்மண்ணின் மக்களுக்கு தம் மூதாதையரிடம் இருந்து வருகின்ற பாரம்பரிய உரிமையுமாகும். இது அம்மண்ணின் மக்களின் வாழ்வியலில் பல்லாயிரம் ஆண்டு காலமாகச் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்ததாகும்.

**பண்பாட்டின் வரைவிலக்கணம்:**

ஒரு மக்கள் இனத்தின் தனித்துவமான வாழ்வியலை, அவர்களுக்குரிய நிலத்துடன் இணைத்து, உருக்கொடுத்து வளர்ப்பதோடு மானிடரைத் தனி ஆளாகவும், குழுமமாகவும் சிந்தனை சொல், செயல் வடிவங்களில் கட்டுப்படுத்தக் கூடிய ஒட்டுமொத்த மதிப்பீடுகள், கருத்தியல், நம்பிக்கைகள் என்பவற்றின் வெளிப்பாடே பண்பாடு எனப்படுகிறது. இதன் பரிணாமமாக சமயநெறி, தத்துவநோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்ற பலவும் வெளித்தோன்றுகின்றன.

**2ம் வத்திக்கான் சங்கம்**, பண்பாடானது மனிதன் தன் உடல் உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு எனப்படுகிறது. மேலும், மனிதன் தனது அறிவு, உழைப்பு என்பவற்றால், தன் சமூக வாழ்விற்கு ஏற்ற பழக்க வழக்கங்களையும், தன் ஆன்மீக அனுபவங்களையும், பிறரோடு பகிர்ந்து வாழ்ந்து, பலரின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அவற்றை நிலை நிறுத்திக் காப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் எனவும் கூறுகிறது. சுருங்கக்கூறின் பண்பாடு பெரும்பாலும் அகவயமானதாயும், நாகரிகம் அகவயமும், புறவயமும் ஆனதாயும் கொள்வது பொருத்தம் போல் தென்படுகிறது. எது எவ்வாறு எனினும், நாகரிகமும் பண்பாடும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டது. போல், பொதுப்படையில் ஒரே பொருளில் பெரும்பாலும் வழங்க வருகின்றன.

(தொடரும்...)


## அலை ஓசை...

காலாண்டு சஞ்சிகையான "அலை ஓசை" க்கு இலக்கிய, சமூக, சமய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் தங்கள் பங்களிப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- ✓ சிறு கதைகள், கடுகுக் கதைகள்.
- ✓ சமய, சமூக, இலக்கியம் தொடர்பான கட்டுரைகள்.
- ✓ பொது அறிவுத் துணுக்குகள்.
- ✓ நகைச்சுவைத் துளிகள்.
- ✓ சுக நலக் கட்டுரைகள்.
- ✓ சம கால அரசியல் அலசல்கள்.
- ✓ சம கால பொருளாதாரப் போக்குகள்.
- ✓ திரைப்பட விமர்சனங்கள்.
- ✓ மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள்.
- ✓ பாலர் பாக்கள்.
- ✓ கருத்துரைக்கும் காட்டூன்கள்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:



**ஆசிரியர், "அலை ஓசை"**
**இல. 17, புனித அந்தோனியார் வீதி,**
**திருகோணமலை**
**077 6771119**
**trincoalaiosai@gmail.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கொன்றார்...

சூசை எட்வேட்



அன்று நத்தார் நாள்! மாதா கோவிலுக்கு திருநாள் பூசைக்கு நானும் கணவரும் சென்றிருந்தோம். நத்தார் கொண்டாட்ட பூசையைப் பற்றீ, கோலாகல கொண்டாட்ட வைபவங்களைப்பற்றி, அலங்கார அழகூட்டல் பற்றி, சந்தோஷ ஆரவாரம் எல்லாம் வழக்கம்போல, அதிகமாக என்றே சொல்லலாம்... இப்போதுதான் சமாதானச் சூழ்நிலை நிலவுகின்றதே.

திருநாள் பூசைமுடிந்தது, சனம் கலையும் போது கைலாகு கொடுத்தும் முத்தங்களைப் பரிமாறியும் மகிழ்ச்சியை தெரிவிக்கும் காட்சியும் அரங்கேறிக் கொண்டிருந்தது! சிற் சில இடங்களில் வயதானவர்களை வயதுக்கு மூத்தவர்களை மரியாதை செய்யும் பொருட்டு தாழ்பணிந்து தோத்தரிப்பதும் நடந்து கொண்டிருந்தது.... நாமிருவரும் ஆசனத்தில் இருந்தபடி இருக்க, எம்மையும் மூன்று நான்கு பேர் உறவினர் வந்து வணங்கி ஆசிபெற்றுச் சென்றனர். இது நல்ல வழக்கம்தானே நாங்களும் இளம் நடுத்தர காலங்களில் இப்படி பெரியவர்களுக்கு மரியாதை செய்திருக்கிறோம். அது தொடர்ந்து (குறைவாக என்றாலும்) பின்பற்றப்படுவது நல்ல விசயம் தான்! ஆனால் இவ்வளவு பேருக்குள்ளும் என் கண்கள் யோக மலரையே தேடியது! எப்போதும் முதல் ஆளாக குடும்பத்தோடு வந்து தோத்திரம் சொல்பவள் அவள். நாம் நெற்றியில் சிலுவை அடையாளமிட்டும் பிள்ளைகளுக்கும் அவளுக்கும் முத்தமிட்டு ஆசி கூறி அனுப்பிவைப்போம்.... இன்று துழாவிப் பார்க்கையில் பாலன் கூட்டுக்கு முன்னால் கை கூப்பி நின்று செபிப்பது கூட்டத்துள் தெரிந்தது! நான் வைத்த கண் வாங்காமல் அவளையே இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அவள் மற்றச் சுருவங்களுக்கும் மரியாதை செய்து விட்டு நேர்வந்து முகப்பு வாசலால் வராமல், பக்கத்து வாசலால் வெளியேறிக் கொண்டிருப்பதைப் பார்க்க மனதை என்னவோ செய்தது! வேண்டுமென்றே இப்படிச் செய்து எம்மைச் சந்திப்பதை தவிர்த்திருக்கிறாள்! ஏன் இப்படி நடந்து கொண்டாள்?....



யோகமலர் இப்படி நடந்து கொண்டது என்கணவன் மனதையும் வெகுவாய் பாதித்தது! "அவள் ஏன் இப்படிச் செய்தாள்!" என்று என்னிடம் கேட்டாள். எனக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை.... "நத்தாருக்கும் புதுவருடக் கொண்டாட்டத்துக்கு வீட்ட வருவாள்தானே, இப்ப என்ன அவசரமோ தெரியல்ல கெதியா ஓடிப் போயிற்றாள்" என்று நான் பதில் சொன்னேன். ஆனால் அவள் நத்தார் வந்து புது வருசக்கொண்டாட்டமும் முடிந்து போயிற்று எங்கள் வீட்டுப்பக்கம் திரும்பியும் பாஉக்கவில்லை!.... எங்கள் தெருப்பக்கம் வந்து போயிருக்கிறாள். அக்கம் பக்கம் வீடுகளுக்குப் போய் தரிசித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் எங்கள் வீட்டை வேண்டு மென்றே தவிர்த்திருக்கிறாள்!..... ஏன்?

யோகமலர் வேறுயாருமல்ல என் கணவரின் அண்ணன் மகள் தான் அண்ணன்காரன் அந்நாளில் இளமைக்காலத்தில் வாட்டசாட்டமான வடிவான ஆண்மகன்! ஆனால் பாலியல் இச்சைபிடித்து அலைந்தவர் கண்டமாதிரியும் நடந்தவர்!..... ஒரு விதவையோடு இரகசிய உறவுவைத்து அவளைத்தாயாக்கி விட்டு ஓடி ஒளித்தவர்! தாய் தகப்பன் பேசி ஒரு பெண்ணை முடித்து, பிள்ளைகளை பேரப்பிள்ளைகளையும் கண்டு வேறு இடத்தில் வாழ்ந்து வருகிறார்! அவர் படும் கஸ்ட சீவியம்தான். இப்படி அநியாயக் காரர்களுக்கு ஆண்டவன் அருள் எப்படிகிடைக்கும்!

இவர் அண்ணருக்கும் விதவைக்கும் பிறந்த மகள்தான் யோகமலர்! விதவையானதிலிருந்தே தாய் தகப்பனும், பின்னர் சகோதரங்களும் சிறுசிறு உதவிகளைச் செய்து போஷித்து வந்தார். இவளும் அக்கம் பக்கங்களில் உறவுக்காரர்களின் வீடுகளில் ஏதும் விசேசம் என்றால் போய் வேலை வெட்டிகள் செய்து வயிறு கழுவிக்கொள்வாள்! தன் பிள்ளையையும் வளர்த்துவந்தாள்.

இவர் தாயையும் பிள்ளையையும் போய் பார்த்து வந்திருக்கிறார். அவளும் பிள்ளையையும் கொண்டு எங்கள் வீட்டுக்கும் வருவாள். சொல்லாமலே ஏதும் உதவிகள் செய்து தருவாள். நாங்களும் பார்த்தும் பாராமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவுகளைக் கொடுத்து அனுப்பியிருக்கிறோம்!.... இவர் சிறியதகப்பன் யோக மலரைக் கண்டால் போதும் மடிமீது வைத்து தடவித்தடவி கொஞ்சிவிளையாடுவார்......

எனக்கும் பிள்ளைப்பேறு தள்ளிப் போய்க்கொண்டே இருந்தது! அதனால் இவள் மீது கொஞ்சக் காலம் அன்பு மழை பொழிந்து வந்தோம்.

யோகமலரின் தாயார் கடை அப்ப வியாபாரமும் செய்து வந்தவள். அப்பம் சுடுவதில் திறமை மிக்கவள்! "நானும் எத்தனையோ இடங்களில் அப்பம் சாப்பிட்டு இருக்கிறன்தான், ஆனா இவர் அப்பம் மாதிரி எங்குமே கண்டதில்ல அவட கைப்பக்குவம் ஆருக்கும் வருகுது இல்ல, உனக்கும் தான்!" என்பார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சில போது என் சகோதரங்களோ சொந்தக்காரரோ இங்கு திருகோணமலைக்கு வந்தால் சில நாள் தங்கித்தான் செல்வர். வேலை கூடிவிடும் சொன்னால் வந்து உதவி ஒத்தாசை செய்வாள். போகும் போது பெரிய தாள்களை யாருக்கும் தெரியாமல் அவள் கையில் திணிப்பார் இவர்! தமையனின் கடனை இவர் தீர்க்க முயற்சிக்கிறார் போலும்!

யோகமலர் சுட்டிப்பெண்ணாக கெட்டிக்காரியாகத்தான் வளர்ந்து வந்தாள். இவள் படிப்புக்காக இவர் இடைக்கிடை போய் உதவி செய்து வருவார். ஆனால் மேற்படிப்பு படித்துக் கொண்டிருந்த இறுதி ஆண்டில் அவள் வாழ்வில் விதிவிளையாடிவிட்டது! பரீட்சை எழுதப்போகும் தறுவாயில், வாழ்க்கைச் சோதனைக்கு பலியாகிப் போனாள்!.... காதல் வலையில் விழுந்து, ஒருவனோடு கூடிக் கொண்டு ஓடிப்போய் கடிமணம் புரிந்து கொண்டாள்!

அவன் அவ்வளவு படிப்பாளியுமல்ல, நல்ல உழைப்பாளியுமல்ல! மின்சார சபையில் சிற்றூழியனாக வேலை செய்பவன். நிரந்தர வேலையுமில்லை சம்பளமும் பெரிதாய் இல்லை!..... யோகமலரின் தாயாரும் இப்போ தெல்லாம் பெரிதாக வேலைக்கும் போவதில்லை. கடையப்ப வியாபாரமும் இல்லை. தள்ளாமை, இயலாமை வந்துவிட்டது!..... பிள்ளைகளும் ஒன்றிரண்டாய்ப் பிறக்க அவர்கள் பாடு கஸ்ட சீவியம்தான்!

"இவள் உயர்தரம் சாதாரணமாக சித்தியடைந்தாலே காணும், நான் நல்ல அரசாங்க வேலையாக எடுத்துக் கொடுத்திருப்பேனே! அவர்கள் சீவியம் சிரமமில்லாமல் போயிருக்குமே! இப்படித் தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்டாளே பாவி!" என்று தலையில் அடித்துக் கொள்வார் இவர் ஒரு நாள் இப்படியும் சொன்னார்: "பருவ வயதில் படிக்கும் போது தான் எதிர் காலத்தை திட்டமிடவும் வேணும், பருவ உணர்ச்சிக்கு பதில் சொல்லவும் வோண்டும்! இரண்டுக்கும் இடையில் நின்று போராடவும் வேணும் தத்தளிக்க நேரும் போராடி வென்று இலக்கை அடைவது சிரமம் தான்!" ...

அவர் சொன்னது சரிதான். அவர் தன் அனுபவத்திலிருந்து சொன்னாரோ என்னமோ என் அனுபவமும் அப்படித்தான்!

யோகமலர் இப்போதெல்லாம் வீடுகளுக்கு வேலைக்குப் போவதாக கேள்வி. தாயிடம் பிள்ளைகள் பராமரிப்பை ஒப்படைத்து விட்டு இவள் வேலைக்குத் திரிகிறாள்..... கணவன் சொற்ப சம்பளத்தில் குடிப்பதும், புகைப்பதும் கூட்டாளிகளோடு திரிவதும் என்று செலவு செய்வதால், சிக்கனமாகத்தான் குடும்பச் செலவு செய்கிறாள்!

இப்போதெல்லாம் எம்மிருவருக்கும் வயதால் இயலாமை வந்துவிட்டது! முக்கிய தேவைகள் வந்தால் இந்த பெரிய வீட்டை வளவை துப்பரவுப்பணி செய்வது சிரமமாக இருக்கும். கூப்பிட்டால் எல்லாம் செதுக்கி பெருக்கி தூசிதட்டி கழுவி சுத்தப்படுத்தி பூசிமினுக்கி அழகூட்டி வைப்பாள்! பெரும் சமயலுக்கும் உதவியாயிருப்பாள்!...... இவள் உழைப்புக்கு இரு மடங்காக இவர் பணம் கொடுத்து விடுவார்!

சில சமயம், வேலையில்லாத போது செலவுக்கு காசு இல்லாத போது, அல்லது வேறு கஷ்ட நஷ்ட தேவைகளின் போது, நிதியுதவி செய்யுமாறு வேண்டுவாள்! திருப்பித்தருவதாக கடனாகத்தான் கேட்பாள் அவள் திருப்பித்தருவாள் என்ற எதிர்பார்ப்பு இல்லாமலேயே அவள் கேட்பதை ஐந்தோ பத்தோ ஆயிரங்களை கொடுத்து உதவியிருக்கிறோம்!..... அவள் திரும்பி ஒரு நாளும் தந்ததில்லை!..... என்றாலும் திரும்ப வந்து கேட்கும் போது கொடுக்காமல் விடவும் இல்லை!..... இதுகள் அறள பேந்ததுகள், மறந்து போயிருக்குங்கள் என்ற எண்ணத்தில்தான் மீளளிப்புச் செய்யாமல் திரும்பத்திரும்ப கேட்கிறாள் என்று எங்களுக்கும் தெரியும்! என்றாலும் இவருக்கு அண்ணரின் பாவம் பழிக்கு பிராயச்சித்தம் தேடுவதற்காக மட்டுமல்ல, அவளில் ஒரு பாச அலை வீசுவது அவளுக்கெங்கே புரியப் போகிறது!

எங்களின் ஒரேயொரு மகன் இப்போ வெளிநாட்டில் இருக்கிறான்! கேட்டுக் கேட்டு அனுப்புவான்! ஆகையால் எங்கள் பாடு செல்வாக்குத்தான்! யோகமலர் போன்றவர்களுக்கு (நேர்மையீனமாக நடந்தாலும்) நாம் உதவுவதில் பின் நிற்பதே இல்லை!...... என் கணவர் தான் அடிக்கடி ஒரு சினிமாப்பாடலை பாடிக்காட்டுவார் "சேர்த்து வைத்த புண்ணியம் தான் சந்ததியைக்காக்குமடா!" என்று. எங்கள் குடும்பம் இந்தள வெண்டாலும் குறைபாடு இல்லாமல் வாழ்வதற்கு முக்கிய காரணம், நாம் செய்த நன்மைகள் தான் என்பார். இதெல்லாம் இவள் போன்றவர்களுக்கு....

(தொடர்ச்சி 28ம் பக்கம்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால அரசியல்... ஓர் அலசல்!



- வண்ணன்

## நல்லாட்சி அரசும் சமகால அரசியலும்

அரசியலில் மாற்றங்கள் என்பவை புதியவையல்ல. இணைந்திருப்பவர்கள் பிரிவதும் புதிய கட்சிகளை உருவாக்கி கொள்கை விளக்கங்களை வழங்குவதும் பின்னர் முன்னைய கட்சிக்கே மீளவும் தாவி "அரசியலில் நிரந்தர நண்பனும்மில்லை பகைவனுமில்லை" என்று வியாக்கியானம் பேசுவதும் அரசியலுக்கும் அரசியல்வாதிகளுக்கும் புதிய விடயமல்ல. எவ்வாறெனினும் இலங்கை அரசியலிலே மிக அண்மைக் காலத்திலே ஏற்பட்ட அரசியல் தாவல்களும் மாற்றங்களும் இயல்பானவை என்றும் வழமையான அரசியல் நகர்வுகள் என்றும் இருந்து விட முடியவில்லை. "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்றும் மக்கள் நினைத்தால் எவ்வாறான அரசியல் தலைகளையும் ஆட்டம் காணச் செய்யலாம் என்பதற்கு இலங்கையில் அண்மைக் கால அரசியல் நிகழ்வுகள் ஒரு சிறந்த உதாரணமாகும். மக்களின் மனங்களை வெல்லாத வரையில் ஆட்சி மாற்றங்களும் தோல்விகளும் தவிர்க் முடியாதவை என்பதோடு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறி அவர்களைத் தூக்கி வீசும் அரசியல் பிரமுகங்கள் உரிய காலம் வரும் போது மக்களும் உதறித் தள்ளுவார்கள் என்பதற்கு அண்மைக்கால இலங்கை அரசியல் கலவரம் சிறந்த உதாரணமாகும். அவ் வகையில் இலங்கையில் கடந்த வருடம் தைத் திங்கள் 8ம் திகதி உதயமாகி அனைவரின் கவனத்தையும் ஈர்த்து, "நல்லாட்சிக்கான அரசாங்கம்" என்னும் அடைமொழி விழிப்புடன்



ஆட்சிப் பீடமேறிய புதிய அரசாங்கம் தனது ஒரு வயது அகவையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சூடு தணியுமுன், நாட்டின் 68வது சுதந்திர தினத்தை 04.02.2016 அன்று மிக விமரிசையாகக் கொண்டாடி சர்வதேசம் மொத்தத்தின் கவனத்தினையும் தன்பக்கம் ஈர்த்துள்ளது. இலங்கையில் நல்லாட்சி தோற்றம் பெற வேண்டுமென்ற அவா பலரிடையே பல காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. என்பது யாவரும் அறிந்ததே.

எவ்வாறெனினும் நல்லாட்சி அரசாங்கம் மக்களின், குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை ஓரளவேனும் நிறைவேற்றி தமிழ் மக்களின் மற்றும் சர்வதேசத்தின் ஆதரவினைப் பெற்றுவிட வேண்டுமென்ற முனைப்போடு செயற்பட முற்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஒரு தசாப்தகால நிலையான அரசியல் ஆட்சிக்கு முடிவு கட்டி அதற்கான முற்றுப் புள்ளியை அந்த அரசியலில் விடுபட்ட ஒரு சிறிய பொறியிலிருந்தே தோற்றுவித்திருந்தமை யாருமே எதிர்பார்த்திராத அரசியல் நகர்வாகும். அந் நகர்வின் வெற்றி நாயகனாக புதிதாக இலங்கை ஜனநாயக குடியரசின் சனாதிபதியாக பதவியேற்ற கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள், முதலாவதாக உச்சநீதி மன்ற நீதிபதியாக தமிழரான கௌரவ கே. சிறீபவன் அவர்களை நியமித்து அவர் முன்னிலையில் பதவியேற்றமை மேலே கூறப்பட்ட விடயத்தினை உறுதிப்படுத்த முன்வைக்கப்பட்ட முதல் படியாக முதலில் தமிழ் மக்களின் மனங்களிலே இனம் புரியாத சந்தோஷத்தை ஏற்படுத்தியிருந்தது.

எவ்வாறெனினும் பெரும்பாலான மக்களின் மனங்களில் புதிய நல்லாட்சி அரசு எதிர்பார்த்தளவிற்கு சிறப்பாக செயற்படவில்லை என்ற குறையையும் மக்களின் மனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவைத்து, அதன் விளைவாக விமர்சனங்களையும் போதியளவில் பெற்றும் கொடுத்துள்ளது. தமிழ் மக்களை அவர்களின் செந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல், இராணுவத்தினரின் கட்டுபாட்டிலுள்ள அவர்களின் காணிகளை விடுவித்து மீள அவர்களிடம் கையளித்தல், விசாரணையின்றி பல் காலமாக தடுப்புக் காவல் மற்றும் சிறையில் வாடுவோரின் விடுதலை, காணாமல் போன உறவுகளின் உண்மை நிலைமையினை வெளியுலகிற்கு காண்பித்தல் என்று தமிழ் மக்களின் எதிர்பார்ப்புப் பட்டியல் நீண்டு கொண்டு சென்றாலும், நல்லாட்சி அரசினால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கால செயற்பாடுகள் ஒரு நம்பிக்கைக் கீற்றினை அவர்களின் மனங்களிலே தோற்றுவித்திருந்தாலும், காலப் போக்கிலே அவையும் முன்னரைப் போன்ற வெறும் வாக்குறுதிகளோ என எண்ணத் தோன்றியுள்ளது. முக்கியமாக அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை



தொடர்பிலே முனைப்பாக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு வலிந்து காணாமல் செய்யப்பட்டோர் தொடர்பிலே தொடர்ந்து கொண்டிருக்கும் இழுபறி மற்றும் தெளிவற்ற நிலைகளை குறிப்பிடலாம்.

எவ்வாறெனினும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக மறுபக்கத்தில் பல தசாப்தங்களின் பின்னர் சுதந்திரத் தினத்தன்று தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை பலரின் கவனத்தினையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது, இலங்கை தேசத்தின் வரலாற்றிலே 1947ம் ஆண்டிலே இடம்பெற்ற முதலாவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் பின்னர் 67 ஆண்டுகள் கழித்து இம் முறை தேசிய சுதந்திரத் தினக் கொண்டாட்டங்களில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, முன்னைய காலங்களிலே உத்தியோகப்பற்றற்ற முறையிலே சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தினையும் மேற்படி செயற்பாடானது மாற்றியமைந்திருக்கின்றமை இங்கே கவனிக்கத்தக்கது. தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை பாரியளவில் வரவேற்பினைப் பெற்ற அதே வேளை இனவாதிகளிடையே எதிர்பார்த்ததைப் போன்றே எதிர்ப்புகளோடு இனத்துவேசம் தொடர்பான அவர்களின் மனவெண்ணங்களையும் மீண்டுமொரு முறை வெளிச்சம் போட்டும் காட்டியுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட பல தசாப்த்த காலங்களின் பின்னர் தமிழ் அரசியல் கட்சியொன்றை அவர்களின் இனம் மற்றும் மொழியினை கவனத்தில் கொள்ளாமல் பாராளுமன்றத்தில் உள்ள ஆசனங்களினை அடிப்படையாகக் கொண்டு எதிர்க் கட்சியாக செயற்பட வழிவகுத்துள்ளமை இன்னும் ஜனநாயகம் சாகவில்லை என்ற கருத்தினை மெய்ப்பிப்பதாக இருப்பதோடு சமகால அரசியலில் பாரிய ஒரு மாற்றமாகவும் இது பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல தன்னை கொலை செய்யவந்த கொலையாளியை மன்னித்து அவரது தலையினை தடவி அவரை விடுதலை செய்தமை மற்றும் தன் சகோதரனின் மீதிருந்த பிழையினை அறிந்து, அவரின் (சகோதரனின்) மரணத்திற்கு காரணமானவரின் குடும்பத்தினருக்கு அறிவுறுத்தி அதனை நடைமுறைப்படுத்தியமை நல்லாட்சிக்கு இருக்க வேண்டிய புரிந்துணர்வு என்னும் பண்பு தன்னிலே முதலிலே செயலாற்ற முதற்குடி மகன் என்ற வகையில் இலங்கையின் சனாதிபதி அவர்கள் வித்திட்டுள்ளமை எதிர்காலம் வளமாக அமையலாம் என்கின்ற நல்லெண்ணம் அனைவர் மனதிலும் வலுப்பெற காரணமாகவும் அமைந்திருக்கின்றது. அவ்வகையில் தமிழ் மக்களின் மனங்களிலே ஆண்டாண்டு காலமாக தொக்கி நின்று விடை தெரியா வினாக்களாக அவர்களின் மனங்களை ரணப்படுத்தி குத்திக் கிழிக்கும் வடுக்களுக்கு நல்லாட்சியிலாவது உரிய விடை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்களைப் போன்றே நானும் இந்த விசேட ஆண்டிலே எதிர்பார்ப்புக்களோடு காத்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை நிமிர்ந்து நில்லுங்கள்! எங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது.

ஆஞ்சலின் சுப்பிரமணியம்

இறைவன் அளிக்கும் இம்மீட்பு கிறிஸ்தவர்களுக்கும் மட்டுமல்ல புற இனத்தாருக்கும் இதில் பங்கு உண்டு அனைவருக்குமுண்டு. கிறிஸ்து கொண்டு வந்த அமைதி, நீதி உலகில் மக்களில் முக்கிய இடம் பெறவேண்டும். அமைதியில்லா உலகு அழிந்து விட்ட உலகு. அமைதியில்லா உள்ளம் அழிந்து விட்ட உள்ளம், இவ்வமைதியை அடைய நாம் அவரோடு இணைந்த வாழ்வு வாழவேண்டும்.

நம்மிடமுள்ள சுயபற்று, தீயகுணங்கள், அநீதியான வாழ்வு இவற்றை அடித்து ஒடுக்கவேண்டும். பிறருக்கும் நன்மை பயக்கும் அன்புஇ நீதி, நேர்மையான வாழ்வு இவற்றை பேணி வளர்க்க வேண்டும். அப்போது தான் இறைவனின் ஒளியில் நடந்து ஒளியின் மக்களாயிருப்போம்.

“ஏற்ற காலத்தில் உனக்கு செவிமடுத்தேன். மீட்பின் நாளில் உனக்கு துணை நின்றேன்” (2கொரி 6:2)

என இறைவன் எம்மைப்பார்த்து கூறுகிறார் “நமக்கோ வானகமே தாய்நாடு.” (பிலிப் 3:20) எனவே இவ்வுலகில் நாம் வேற்று நாட்டினரென அந்நியர் போன்று வாழ்வு நடத்த வேண்டும்.

வாழ்வின் இறுதிக்காலத்தில் வாழ்கிறோம் என நினைத்து வாழ வேண்டும் தூய ஆவியை பெற்ற நாம் ஒவ்வொரு நாளும் நற்செயல்கள் பல புரிந்து மீட்பில் பங்கு கொள்ள வேண்டும்.

அன்றாடம் நம் வாழ்வில் நடக்கும் விபத்துக்கள், மாரடைப்பு, இயற்கை அனர்த்தங்களால் வரும் சாவுகள் முதலியன ‘‘காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா’’ எனக்கூறாது முழங்கிக் கொண்டிருக்கிறன. காலத்தின் அறிகுறிகளில் கடவுளைக்காண்கிறோமா? அன்றாட நிகழ்ச்சிகள் வழி ஆண்டவனை அறிந்து கொள்ள முயல்கிறோமா? மீட்பு என்பது வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியும் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், இறைவனோடு நமக்குள்ள உறவை வலுப்படுத்தவும் பாலமாக அமைகிறதா? வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தலை நிமிர்ந்து நிற்போம் எங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது.

## க.பொ.த (சாதாரண தர) மாணவர்களுக்கானது கத்தோலிக்க திருமறை புதிர்ப்போட்டி 01



**சுருக்கமான விடை தருக.**

1. திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் யார்? ..........
2. திருவிவிலியம் எப்போது எழுதப்பட்டது? ...
3. மக்களால் விரும்பப்படுகின்ற இரு வரலாற்று நூல்கள்? ..........
4. புதிய ஏற்பாட்டால் முதல் முதலில் எழுதப்பட்ட நூலும் காலப் பின்னணியையும் தருக? ..........
5. பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கிய நூல் எது? ..........
6. திருவிவிலியத்தில் உள்ளடங்காத கத்தோலிக்கத் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதனை மூலம் எது? ..........
7. சட்ட நூல்கள் எத்தனை? அவை எவை?. ..........
8. பழைய ஏற்பாட்டிலுள்ள வரலாற்று நூல்கள் எத்தனை? அவற்றின் பெயர்களைத் தருக? ..........
9. ஞான நூல்கள் எத்தனை? அவை எவை? ..........
10. இறைவாக்கினர் நூல்கள் 5 தருக? ..........

மாணவர் பெயர்: ..........
பாடசாலை: ..........
தரம்:.......... பங்கு:..........
மாணவர் கையொப்பம்: ..........

சரியான விடை எழுதுவோர்களில் இருந்து குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று மாணவர்களுக்கு ரூபா. 300 வீதம் வழங்கப்படும். உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய கடைசி திகதி – 2016.04.30

**அனுப்ப வேண்டிய முகவரி: “அலையோசை”, இல. 17, புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீரழிவு நோய்

**Dr. Mrs. R.A. தேவராஜா**

இது பல்வேறு அனுசேப தாக்கங்களின் கூட்டு விளைவால் ஏற்படக் கூடிய நோயாகும். இதனால் நீரழிவு ஏற்பட்ட ஒருவர் தனது குருதியில் மேலதிக அளவு குளுக்கோசினை நீண்ட காலத்திற்கு உடையவராக காணப்படுகிறார்.

இதன் மூலகாரணமாக பின்வரும் தாக்கங்கள் கொண்டதாக காணப்படும்.

1. இன்சுலின் சுரப்பு உற்பத்தியில் மந்த நிலை.
2. உடலின் கலங்கள் இன்சுலினுக்குரிய முறையில் இயங்கமுடியாதிருத்தல்.
3. அல்லது இவ்விரண்டும் சேர்ந்ததாகும்.

சாதாரனமாக எமது உடல் நாம் உண்ணும் உணவிலுள்ள மாச்சத்து, புரதம் என்பவற்றை உடற்கலங்களில் குளுக்கோசாக சேமித்து அதனை சக்தி தேவைப்படும் போது உபயோகப்படுத்துகின்றது.

கலங்கள் இவ்வாறு குளுக்கோசினை உள்ளெடுக்க முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுகின்றது.

உலகளாவிய ரீதியில் (2014 ஆய்வின் படி) 400 மில்லியன் மக்கள் நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கண்டறிய பட்டுள்ளதுடன் இதில் ஆண்களும், பெண்களும் சமவிகிதத்தில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நீரழிவு நோய் மூன்று முக்கிய வகையாக பிரிக்கப்படுகின்றது.

**வகை 1**

**1.** இங்கு உடல்கள் (கணையச்சுரப்பி) இன்சுலினை சுரப்பதில்லை.

**2.** இன்சுலின் சார்ந்திருக்கும் நீரழிவு நோய் 40 வயதை எட்ட முன்பே நீரழிவு பாதிக்கும். நோயாளர் தமது வாழ்நாள் முழுவதும் இன்சுலினை ஊசி மூலம் பயன்படுத்த வேண்டியவர்கள் ஆவார். இவர்கள் மொத்த நோயாளர்களில் 10% ஆவார்கள்.

**3.** இதற்கு மரபியல் காரணி முக்கிய இடத்தை வகிப்பதுடன் உணவுப்பழக்கம் மற்றும் வைரஸ் தொற்றுகளால் தூண்டப்படக்கூடியதாகும்.

**வகை 2**

1. உடற்கலங்கள் இன்சுலின் சுரப்பிற்கு உரிய முறையில் இயங்காதிருத்தல். இதுவளர்ந்தோரில் ஆரம்பிக்கும் நோய் ஆகும். (Adult onset Diabetes)

**வகை 3**

1. சுரப்ப காலத்தில் நீரழிவு நோயினால் பாதிக்கப்படல். அத்துடன் பிள்ளைப்பேறின் பின் மீண்டும் வழமைக்கு திரும்புதல்.

நிரழிவு நோய்க்கான காரணிகளாவன.

- மரபணு குறைபாடுகள்.
- கணையம் சரிவர தொழிற்படாமை.
- நோய்த்தொற்றுகள்.
- ஏனைய நோய்களுக்கு பயன்படும் மருந்துக்கள் உ+ம் ஆஸ்த்துமா

**அறிகுறிகள்.**

1. நிறை குறைதல்

எமது உடல் குளுக்கோசினை பயன்படுத்த முடியாத நிலையில் கொழுப்பு, புரதம் போன்றவற்றை சக்தி தேவைக்காக பயன்படுத்தல். அத்துடன் மேலதிக குளுகோஸ் சிறுநீர் வெளியேற்றம் ஏற்படுகின்றது.

2. அதிகளவு சிறுநீர் கழிதலும் தாகமும்

குருதியில் காணப்படும் அதிகளவு குளுக்கோஸ் ஆனது மேலதிகமான நீரை உடற்கலங்களிலேயே இருந்து உறுஞ்சுவதனாலேயே கூடுதல் தாகமும், அதிகளவு சிறுநீர் வெளியெற்றமும் ஏற்படுகின்றது.

3. அதிகளவு பசி

உடற் கலங்களில் உள்ள இன்சுலின் குறைபாடானது கலங்கள், தசைநார் மற்றும் அவைகளுக்கு உரிய சக்தி தேவையை ஈடுகட்ட முடியாமல் போகிறது. இதவே அடிக்கடி அதிகபசி தூண்டப்பட காரணமாகின்றது.

4. களைப்பு

தசைகளுக்கு உரிய சக்தி தேவை பூர்த்தி செய்யப்படாமை களைப்பை உணர வைக்கபடுகின்றது.

காயங்கள் ஆறுவதில் தாமதம்/தோல் தொற்றுகள்.
குருதியில் காணப்படும் அதிகளவு குளுக்கோஸ், காயங்கள் ஆறுவதை தாமதப்படுத்துகின்றது. அத்தடன் தோல்நோய்கள் தொற்றுதலுக்கும் காரணமாகின்றது.

5. பார்வை குறைபாடுகள்

அதிகளவு குளுக்கோசானத விழிகளில் வில்லைகளை பாதிக்க செய்வதனால் பார்வைக்குறைபாடுகள் ஏற்படலாம்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்... மண்ணின் சரித்திரம்!

குடும்பத்தின் குல விளக்குப் பெண்
குடும்பத்தின் அகல் விளக்கு பெண்
ஓர் உயிரை உலகிற்கு கொணர்பவள் பெண்

உன் தாயும் பெண்
உன் தாரமும் பெண்
இதை நீ உணர்ந்தால்
போற்றப்படும் பெண்மை

பெண் என்பவள் அடிமையல்ல
நீ ஆதிக்கம் செலுத்த
அவள் ஓர் ஆனந்த பூங்காற்று
அவள் விளையாட்டுப் பெம்மையல்ல
அதிசயிக்கும் ஓவியம்

பெண் ஒரு புதுமையல்ல
புஸ்பம் என்னும் மலர் செண்டு
பெண்ணின் மேன்மை போற்ற
சமவுரிமை வேண்டும்.
ஓ......... மானிடமே !
என்று நீ பெண்ணினத்துக்கு
விடியலைத் தரம் போகின்றாய்?

பெண்ணினம் நிம்மதி பெற்றிட
சமத்துவத்தினை ஓங்கிட
பெண் குலம் எழுந்தால்தான்
மண்ணில் சரித்திரம் நிலைக்கும்

எம்.ஏ.அடலினா



## உயிர்ப்பின் தேவன்

மாண்டவர் மீண்டு உயிர்த்து வருவது
மண்ணகம் காணா விநோதம்
ஆண்டவர் மீண்டும் உயிர்த்தாரென்பது
விண்ணும் போற்றும் புனிதம்

மனிதனாய்ப் பிறந்து புனிதனாகிய
மனுமகன் இயேசுவுக்கு நிகராய்
இனியவரில்லை அவர் இரக்கத்தினெல்லை!
இறையருள் நாமும் பெறுவோம்

சொன்னதைச் செய்து செய்வதைச் சொல்லி
சொந்தங்கள் வளர்த்த பேராயன்
சின்னதைப் பெரியதாய் மாற்றிவைத்து
சிலுவையின் நாயகன் வென்றார்
அன்னார் வழியை நாம் தொடர்ந்து
அடைவோம் புதிய வாழ்வை
இன்னார் இனியார் என்று போற்ற
இயேசுவை பின் தொடர்வோம்!



செ. ஞானராசா

## என் இறைவன்

**கருவினிலே என்னை உருவாக்கி
கண்மணியாய் என்னைக்காத்து
காலங்கள் காட்டி
காண்பித்த என் இறைவன்!
கல்வி என்பதை புகட்டி
கண்ணியமாக என்னை நடத்திய
இறைவன்!
கனிவாக நடத்தி
காணும் போது என்னை வழி நடத்தி
கண்ணில் கண்ணீர் வருமளவு
இறைவனை காணவைத்து
கடைசியில் எனது பரிசாக இறைவன்!
கல்லறை எனும் காட்சியை தந்து
காலமெல்லாம் அவருக்கு பணிசெய்து
வாழ்வேன்!**

R.K. அலோசியஸ்

## தேடி வந்தேன்

பாவியைத் தேடிவந்த பரமன் இயேசு
காணாமல் போன ஆட்டுக்குட்டியை
கண்டு கொண்டதைப் போல – நானும்
ஒதுக்கப்பட்டு வெறுக்கப்பட்ட
சிலரின் வாழ்வுக்காய் வந்துள்ளேன்!

ஆயிரமாயிரம் பேர்களை ஆளாக்கிவைத்த
அகமகிழ்ச்சியைக் காட்டிலும்
ஆங்கொன்றும் இங்கொன்றுமானோரை
பங்கொன்றில் சேர்க்கும் பணியில்
அங்கம் வகிப்பது பேரானந்தம்!

நோயற்றோர்க்கு என் சேவை வைத்தியம்
நோயற்றவருக்கோ நானொரு பைத்தியம்
வாயற்றோர் முன் வாய்திறப்பேன்
வாயாடிகள் மத்தியில் பேசாதிருப்பேன்.

எங்கேயும் எப்போதும்
எதிர்பார்ப்பதை விட வேறு நடக்கலாம்
அங்கே நானும் அங்கம் வகிக்கலாம்
எனது உதவி தேவைப்படும்
என் அயலானுக்காகவே!.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருகோணமலை மாவட்டத்தினுள் அருட்தந்தையர்களுக்கான புதிய நியமனங்கள்

1. **அருட் தந்தை கிங்ஸ்லி றொபேட்** - குரு முதல்வர், பங்குத் தந்தை தம்பலகாமம், கப்பல்துறை பங்குகள். பொதுநிலையினர் மையம் உப்புவெளி.
2. **அருட் தந்தை யூட் ஜோண்சன்** - பங்குத் தந்தை புனித மரியாள் பேராலயம் பங்கு, இயக்குனர் குடும்ப அப்போஸ்தலிக்கம்.
3. **அருட் தந்தை ஜோண் பிள்ளை** - அதிபர் சிறிய குரு மடம் உப்புவெளி, பொறுப்பாளர் பொது நிலையினர் மையம் உப்புவெளி, இயக்குனர் திருப்பாலத்துவசபை.
4. **அருட் தந்தை டக்ளஸ் ஜேம்ஸ்** - பங்குத் தந்தை உவர்மலை குழந்தை இயேசு ஆலயப் பங்கு.
5. **அருட் தந்தை அலெக்ஸ் செல்லையா** - உதவிப் பங்குத் தந்தை உவர்மலை குழந்தை இயேசு ஆலயப் பங்கு.
6. **அருட் தந்தை ஜெயரெட்ணம்** - பங்குத் தந்தை செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார் ஆலயப் பங்கு.
7. **அருட் தந்தை றொஹான் பேர்ணாட்** - இயக்குனர் இளைஞர் ஒன்றியம், பீடப் பணியாளர்கள் ஒன்றியம்.

## திருகோணமலை மறை மாநில கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை அங்குரார்ப்பணம்

வரலாறுகளும் விழுமியங்களும் பாதுகாக்கப்படல் வேண்டியது காலத்தின் தேவையாகும். கடந்த 16.01.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பேராலய ஒன்றுகூடல் மண்டபத்தில் மறைமாநில ஆயர் வந்தனைக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களால் வரலாற் று ரீதியாக திருகோணமலை மறை மாநில கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு அதன் வளர்ச்சிப்படிகளின் நோக்கத்தைக் கலையுலகில் மருவும் போக்குகளையும் அதன் தேவைப்பாடுகளையும் அத்துடன் கலையும் இலக்கியங்களும் எங்ஙனம் மனித வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது என்றும் அவை எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது பற்றிய கருத்துக்களுடன் ஆசீர் வழங்கினார்.

அலை ஓசை மற்றும் மறை மாநில கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் இயக்குனர் அருட்பணி றொஹான் பேர்னாட் அவர்கள் பேரவையின் துாரநோக்கு, நோக்கங்கள் மற்றும் செற்பாடுகளைப்பற்றிய விளக்கத்துடன் வரவேற்புரையைத் தனதாக்கியதுடன் பேரவையின் அங்கத்தவர்களின் முழுமையான ஒத்தழைப்பையும் பங்களிப்பையும் நாடினார். மறைபரப்புப்பணியில் இலக்கியங்களின் பயன்பாடு எனும் தொனியில் திரு. கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களினால் உரையாற்றப்பட்டது.

தொடர்ந்து கலந்துரையாடலினை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்பணி ஏ. நவரெட்ணம் அடிகள் நெறிப்படுத்தி கலை இலக்கியம் என்பதில் பங்காளர்களான நாங்கள் அதனைப் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் பூக்கச் செய்தல் எனும் தாற்பரியத்தை தெளிவுறச் செய்து இலகுபடுத்தினார். மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்த கலை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள், பாண்டித்தியவான்கள், எழுத்தாளர்கள், இளம் தலைமுறையினர் உட்பட்டவர் அங்கத்துவம் கொண்டமை சிறப்பம்சமாகும்.

புனித மரியாள் கல்லூரி மாணவிகளினதும் தபோவன பிள்ளைகளின் நடனங்களும் பாடல்களும் நிகழ்வுக்கு மெருகூட்டியமை சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இங்கே வா!

கொத்திக் கொத்தி குறுணல் பொறுக்கும்
கோழிக் குஞ்சே இங்கே வா...
கத்திக் கத்தி உன்னைத் தூக்க
காகம் கரையுது இங்கே வா...

தாயை விட்டுப் பிரிந்து போனால்
தனிமையாவாய் அறிவாயே
வாயைக் கட்டி வளர்க்கும் தாயின்
வார்த்தை கேட்டு நடப்பாயே...

காக்கக் காக்க குஞ்சைக் காக்க
கவனம் உள்ள தாய் போல
ஆக்கள் வேறு எவருமில்லை
ஆபத்துக்கள் சிக்காதே

வளர்ந்து பெரிதாய் வரும் வரைக்கும்
வளர்க்கும் தாயைப் பிரியாதே
கலந்து ஒன்றாய்ச் சேர்ந்திருந்தால்
கவலையில்லை மறவாதே...

திருமதி. ஞா. சுகிலா





## அப்பருக்காக

சுட்டிப் பயலே,
சுணங்கடா கொஞ்சம்!
வெட்டி விழுத்தும்
வேலையாளா நீ?

விடிந்தால் பள்ளி,
விட்டால் ஆட்டம்!
முடிந்தால் படுக்கை,
முழித்தால் பாட்டு!

செய்யாய் நீயும்,
செய்யவும் விடாயாம்!
கைவினை வேலை,
கனக்கவே உண்டாம்!

அடங்கடா கொஞ்சம்,
அப்பருக்காக!
இடும்போ துன்தீன்,
எடுத்தருந்திடடா!

தாமரைத்தீவான்

---

**ஆயரின் ஆசிச்செய்தி தொடர்ச்சி...**

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென அனைத்து மதங்களும் அழைப்பு விடுக்கின்றன. சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என இயேசு தன் சீடர்களுக்கு கட்டளையிட்டார். இறைவனின் அன்பு, இரக்கத்தை போதிப்பதும் வாழ்ந்துகாட்டுவதுமே எமது பணி.

இன்று "அலை ஓசை" தொடர்பகத்தின் மூலமாக வெளியிடப்படும் இலக்கியசஞ்சிகை மூலம் சமூக வளர்ச்சிக்குத் தேவையான பல விடயங்களும் வெளிவரவிருக்கின்றன. அதேவேளை இலக்கிய ஆர்வலர்கள் இச் சஞ்சிகை மூலம் தமது ஆற்றல்களை வெளியிடவும் இது ஒரு சிறந்த தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த சஞ்சிகை வெளிவர முன்னின்று உழைக்கும் அருட்தந்தை றொஹான் பேணார்ட் அவர்களுக்கும் அவரோடு உழைக்கும் திரு. கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இப்பணி தொடர வாழ்த்தி, இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தமிழ்த்தூது' தனிநாயகம் அடிகளாரின் இதழியல் பணிகள்

அருட்தந்தை அ.அ. நவரெட்ணம்



தவத்திரு தனிநாயகம் அடிகள் தன்தமிழ் வளத்தை எண்திசையும் பரப்பியவர். பைந்தமிழை ஆய்ந்தவர். செந்தமிழில் தோய்ந்தவர். கிறிஸ்தவமும் தமிழும் தன் இரு கண்களெனக் கொண்டவர். பல நாடுகளிலும் தமிழைப் பரப்பியவர். பல நாட்டவரும் தமிழ்க் கலையையும் தமிழ்க் கல்வியையும் தமிழாய்வையும் பெற வித்திட்டவர். பன்மொழி அறிந்தவர், பன்னாடு கண்டவர், மிகச்சிறந்த பேச்சாளர், இதழாளர். அன்னாரின் பிறப்பின் நூற்றாண்டு மகிழ்வினை மூன்று வருடங்களுக்கு முன்னால் (1913 – 2013) தமிழ்கூறும் நல்லுலகம் கொண்டாடி மகிழ்நதது. அடிகளார் கத்தோலிக்க குருவானவர், பல்கலைக்கழக பேராசிரியர், பேரறிஞர், செயல் வீரர், தேசிய உணர்வாளர் எனும் பன்முகத்தன்மையினை தன்னகத்தே உள்ளடக்கிய மாபெரும் கடலாவார். அம்மாபெரும் கடலின் ஓர் அங்கமாகிய இதழியல் பணியினை மாத்திரம் இங்கே நாம் உற்றுநோக்குவோம்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் பல இதழ்களில் எழுதியுள்ளதோடு சில இதழ்களை நடத்தி அவற்றின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் இதழ்கள் நடாத்தியுள்ளார். இவற்றின் கருப்பொருளானது கல்வி, சமயம், ஆய்வு, தமிழ் சார்புடையதாகும். அவை தொடர்பான விடங்களையே எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் மற்றும் நேர்காணல்கள் போன்றவை பொது இதழ்களிலும், சமய இதழ்களிலும், ஆய்வு இதழ்களிலும், பன்னாட்டு இதழ்களிலும், ஆண்டு மலர், நினைவு மலர், சிறப்பு மலர், மாநாட்டு மலர் ஆகியவற்-றிலும் வெளிவந்துள்ளன.

### தமிழ் இதழ்கள்

சிறுமலர், தமிழ் ஒளி ஆகிய தமிழ் இதழ்களின் ஆசிரியராக விளங்கிய அடிகளார் ஞானதூதன், கத்தோலிக்கு சேவை, சத்தியவேத பாதுகாவலன், தமிழ் ஓசை, இளங்கதிர், சமூக மஞ்சரி, கலைப்பூங்கா, தமிழ் நேசன், வீரகேசரி முதலிய இதழ்களிலும் எழுதியுள்ளார்.

### சிறுமலர்

அடிகளார் தென் இந்தியாவின் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் வடக்கன்-குளம் ஆலய திரேசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத்தலைமை ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் (1940 – 1945) தூய திரேசாளை முதன்மைப்படுத்தி 'சிறுமலர்' எனும் இதழை வெளியிட்டு அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

### தமிழ் ஒளி

'தமிழ் ஒளி' இதழானது மலாயப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழித்துறையில் தமிழ்ப் பேரவை சார்பில் 1960ம் ஆண்டில் அதன் தலைவராகவிருந்த முத்து இராசக்கண்ணனரால் தொடங்கப்பட்டது. 1961ல் அடிகளார் அத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் தமிழ் ஒளி இரண்டாவது இதழை தமது வாழ்த்துரையுடன் வெளியிட்டார்.

### ஞானதூதன்

இவ்விதழானது 1928ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஜே. ரோச் என்பவரால் தொடங்கப்பட்ட கத்தோலிக்க மாத இதழாகும். தனிநாயகம் அடிகளார் தூத்துக்குடியில் இருந்த காலத்தில் சமயச்சார்புடைய கட்டுரைகள் பலவற்றை இவ்விதழில் எழுதினார்கள். இவற்றுள் தூய பெலவேந்திரர் (St. Andrew) வாழ்க்கையைக்கூறும் 'நாளங்காடி வீதியிலே' என்கின்ற அடிகளரின் கட்டுரை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

### கத்தோலிக்க சேவை

இவ்விதழானது மதுரை கத்தோலிக்க மறைமாவட்டத்திலிருந்து 1941ம் ஆண்டிலிருந்து மாதமிருமுறை வெளிவரத் தொடங்கியதாகும். இதனிலும் அடிகளார் பலவிதமான சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்தியவேத பாதுகாவலன்**

வார இதழாகிய இதனில் அடிகளார் 1949, 1951, 1954ம் ஆண்டுகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்விதழில் வெளிவந்த தமது கட்டுரைகளைத் தொகுத்து அடிகளார் 'தமிழ்த்தூது' எனும் நூலினை தூத்துக்குடி தமிழ் இலக்கியக்கழக வெளியீடாக 1952ம் ஆண்டில் வெளியிட்டார்.

**தமிழ் ஓசை**

இவ்விதழில் அடிகளார் எழுதிய 'மலரும் மாலையும்' (தொகுதி எண் 2) எனும் கட்டுரை 1952ம் ஆண்டில் வெளிவந்தது.

**இளங்கதிர்**

இவ்விதழின் (தொகுதி 11) 1958 – 1959ம் ஆண்டில் அடிகளார் 'ஒற்றுமை அமெரிக்கா' எனும் தலைப்பிடப்பட்ட கட்டுரை எழுதியுள்ளார்.

**சமூக மஞ்சரி**

1960ல் இவ்விதழில் 'முதிர்ந்தோர் கல்வியின் விரிவு' எனும் தலைப்பில் அடிகளார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மேற்சொன்ன மூன்று இதழ்கள் குறித்த விபரங்கள் தெரியவில்லை.

**கலைப் பூங்கா**

இவ்விதழ் இலங்கை இலக்கியக் கழகத்தினால் (Ceylon Literary Academy) வெளியிடப்பட்ட அரையாண்டு இதழாகும். இதிலே அடிகளார் 'திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்.

**தமிழ் நேசன்**

மலேசியா நாட்டிலிருந்து வெளிவருகின்ற நாளிதழாகிய 'தமிழ்நேசன்' அடிகளாரின் படைப்புக்களுக்கு போதிய இடங்கொடுத்து வந்துள்ளது. அந்தவகையில் மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் 09.06.1963ல் அடிகளார் ஆற்றிய 'மலேசியாவின் தமிழ் எழுத்தாளர்களும் அவர்களின் பணியும்' எனும் உரையினை முழுமையாகப் பிரசுரித்தது. அவ்வாறே உலகத்தமிழ் மாநாடு குறித்த அடிகளாரின் 'தமிழ்த் துறைகளின் உலகக் கருத்தவை' எனும் கட்டுரையினை முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு சிறப்பு மலரில் 16.04.1964ல் இவ்விதழ் வெளியிட்டது. இன்னும் அடிகளார் மலேசியாவில் நடாத்திய முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் வெற்றிக்காக இவ்விதழ் பெருந்தொகையான நிதியுதவி செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஈழநாடு**

இவ்விதழில் 'தமிழ் மொழியின் வேர் இயல்' (Tamil Etymology) எனும் தலைப்பில் 1971ம் ஆண்டில் அடிகளார் கட்டுரையொன்று எழுதியுள்ளார்.

**பாதுகாவலன்**

1876ல் பிலிப்பையா என்பரால் முதன்முதலில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க தமிழ்ப் பத்திரிகை கத்தோலிக்க பாதுகாவலன் ஆகும். முதலில் மாதமிருமுறை வெளவந்த இவ்விதழ் 1877 தொடக்கம் வார இதழானது. அடிகளார் இலங்கையில் இருந்தபோது பல கட்டுரைகளை இதில் எழுதியுள்ளார். 22.12.1973 இதழில் புலவர் வேதநாயகம்பிள்ளை எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

**வீரகேசரி**

இலங்கை வீரகேசரி வாரவெளியீட்டில் அவரது மறைவிற்குப் பிற்பாடு அவர் எழுதிய 'வீரமாமுனிவர் தமிழாராய்ச்சிப் பங்களிப்பு செய்த ஐரோப்பியரில் தலைமகன்' எனும் கட்டுரை 05.10.1980ல் வெளிவந்துள்ளது.

**கல்கி தீபாவளி மலர்**

சென்னையிலிருந்து வெளிவரும் கல்வி தீபாவளி சிறப்பு மலரின் 1956, 1958ம் ஆண்டு இதழ்களில் அடிகளாரின் கட்டுரை வெளிவந்துள்ளது.

**உலகத்தமிழ் மாநாட்டு மலர்**

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலரில் அடிகளாரின் ஆங்கிலக் கட்டுரையொன்று வெளிவந்துள்ளது. அவரது மறைவுக்குப்பின் ஐந்தாவது மாநாட்டு மலரிலும் அவரது கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

அடுத்த ஓசையில் தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையுரையிலிருந்து...



**(உவர்மலை குழந்தை யேசு ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் இறுதி நாளான 2016.02.07ம் திகதியன்று நடைபெற்ற கூட்டுத் திருப்பலியில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்கள் ஆற்றிய மறையுரையின் தொகுப்பு)**

**ஒ**வ்வொருவரின் அன்றாட வாழ்வில் அவரவர்கள் பெறும் அனுபவங்கள், வாழ்வியல் முறைகள் என்பன இறைவன், பெற்றோர், குழந்தை ஆகிய மூன்று நிலைகளினூடாகக் கடந்து போகின்றது. குழந்தையினை உலக அனுபவங்களிலும் ஆன்மீக நிலையிலும் வளர்த்துக் கொடுக்கும் பாரிய பொறுப்பு பெற்றோருக்குரியதாகும். பெற்றோர் தமது கடமைகளை இறை உணர்வோடும் இறை விசுவாசத்தோடும் மிகவும் கவனமான முறையில் செய்ய வேண்டியது அவசியமாகும்.

குழந்தை பிறந்து தமது படிநிலை வளர்ச்சியில் நான்கு விதமான நிலைகளைக் கடந்து பிள்ளைப்பருவத்தை அடைகிறது இந்த நான்கு நிலைகளிலூடாகப் பெற்ற அனுபவம் அக் குழந்தையின் வாழ்வில் அடுத்தடுத்த நிலைகளில் பக்குவத்தினையும் உள முதிர்ச்சியினையும் பெறுவதற்கு ஏதுவாகின்றது. அந்த நிலைகளாக கர்வம், அனுபவம், தண்டனை, உணர்வு என வகைப்படுத்தலாம்.

ஒவ்வொரு குழந்தையும் தமது தாய் தந்தையின் அரவணைப்பில், அவர்கள் பராமரிப்பில் அவர்களால் காட்டப்படும் அன்பின் சுகானுபவத்தில் மூழ்கி கர்வத்தையடைகிறான். தமது பெற்றோரின் பாதுகாப்பில் வாழ்வு அமையும் போது இயல்பாகவே அவனுக்குள் ஒரு வித பாதுகாப்புணர்வு ஏற்படுவது. தான் ஒரு பாதுகாப்புக் கட்டுக்குள் சுதந்திரமாக வாழ்வது ஒரு வித பெருமையை ஏற்படுத்துகிறது. இந்தப் பெருமையினுடாக பெற்றோரிடம் தாம் விரும்பும் பொருட்களை கேட்பதிலும் அதைப்பெற்று அனுபவிப்பதில் ஆசைப்படுவதும் இயல்பானதே. முதலில் பெற்றுக் கொண்ட பொருளைக் கையால் ஸ்பரிசித்த பின் அதை கண்களால் அவதானித்த பின் அதை தன் நாவினால் சுவைக்க என பல வித அனுபவங்களைப் பெறுகிறது. சில வேளைகளில் தன் கண்ணில் காணும் எல்லாவற்றிலும் அனுபவம் பெற ஆசைப்படும் போது விபரீதங்கள் ஏற்படுவதுமுண்டு. இவ் வேளையில் பெற்றோர்கள் கூட இருந்து அவனின் செயலைக் கட்டுப்படுத்தும் போது அதைமீறுகின்ற வேளையில் தண்டனை பெற வேண்டியேற்பட்டு விடுகிறது. உதாரணமாக தீயைக் காணும் குழந்தை அதன் வெளிச்சத்தில் கதகதப்பில் ஆகர்சிக்கப்படுகின்றான். அதைத் தொட ஆவலும்கொள்கின்றான். பெற்றோர் என்ன சொன்னாலும் ஆவல் அவனைத்தூண்ட தீயில் விரலை வைத்ததும் வெப்பம் அவன் விரலைச்சுட ஒருவித தண்டனைக்குள்ளாகிறான். இதனடிப்படையில் அவன் ஒருவித உணர்வின் பக்குவத்தையடைகிறான். செய்யக் கூடியது, செய்யக் கூடாதது எவை என்பதை உணரும் போது பெற்றோரின் எச்சரிக்கை அவனை ஆட்கொள்கிறது.

இனி நாம் வேதாகமத்தின் வார்த்தைகளைப் பெற்றோர், குழந்தை, இறைவன் ஆகிய நிலைகளில் நோக்குவோம். எருசலேம் தேவாலயம் அப்பிரதேசத்தின் மிகப் பெரிய தேவாலயமாக இருந்தது. அந் நாளைய வழக்கப்படி ஆண்டு தோறும் ஆலயத்தினைச் சுற்றி 20 மைல் தூரத்திற்குட்பட்டு வாழும் யூத ஆண்கள் வருடத்திற்கு மூன்று தடவையாவது எருசலேம் தேவாலயத்திற்கு சென்றிருக்க வேண்டும் பாஸ்க்கா திருவிழா, பெந்தக்கோஸ்து திருவிழா, கூடாரத் திருவிழா; அதேவேளை 13 வயதைவிட கூடிய ஒவ்வொரு பிள்ளையும் "சட்டத்தின் பிள்ளை" என அழைக்கப்படுகின்றான். 11, 12 வயதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு அழைத்துச் செல்வதும் வழிபாடுகளில் ஈடுபடுவதும் இறைவன், இறை சட்டங்கள் தொடர்பான அறிவை பெறச் செய்வதும் பெற்றோருக்கு இறைவன் தந்த பொறுப்பாகும். தமது பிள்ளைகளை நல்வழியில் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும் என்பதும் முக்கியமாகும்.

ஆதனால் தான் "இளமையிற்கல்வி முதுமையில் செல்வம்", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்றெல்லாம் இளைமையில் கல்வியையூட்டவேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தப்படுகின்றது. அதனால் "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்.... இறையாட்சி அவர்களதே" என்று யேசு கூறுகிறார். அதாவது குழந்தைபருவம் என்பது பாவமற்ற.... பாவம் செய்யாத.... பாவம் என்றால் என்னவென்றே தெரியாத பருவமாகும்.

ஆதலால் தான் லூக்கா நற்செய்தி 2:41-52 வசனத்தில் இயேசு ஆலயத்தில் நடந்து கொண்ட விதத்தை அழகாக விபரிக்கிறது. "அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்வி எழுப்பிக் கொண்டுமிருந்தார். அவற்றைக்கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் கூறும் பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர்....!" இங்கே குறிப்பாக அவதானித்தால் இயேசு போதகர்களின் வார்த்தைகளை அவதானித்து செவிமடுத்து கேட்கிறார். பொருத்தமான கேள்விகளையும் கேட்கிறார். அவர் மிக அனுபவமும் அறிவும் பெற்ற போதகர்கள் மத்தியில் ஒரு சிறுவனாக அமர்ந்து கேள்விகேட்கிறார்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த போதகர்களும் ஐவரை சிறப்பாக நாம் குறிப்பிடலாம் இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் திருத்தூதர் பணி 22:3 ஐப் படிக்கும் போது திருச்சட்டத்தில் தேர்ச்சி பெற்று அதற்காகவே தன்னை அர்ப்பணித்திருந்தார் சவுல் என்கின்ற பவுல் என்பதை அறிகிறோம். அந்த வகையில் இவர்கள் ஒவ்வொருவரும் திருச்சட்டத்திலும் "தோறா" என்கின்ற வேத நூல்களிலும் இறைவாக்கினர்களின் போதனைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள் என்பது வெளிப்படுகின்றது. எனவே இப்படிப்பட்ட ஜாம்பவான்களின் மத்தியில் தான் சிறுவன் யேசு தனது இறை ஞானப் புலமையை பதிவு செய்திருக்கிறார் என்பதை உணரமுடியும்.

தாய் மரியாவைப் பொறுத்தவரை ஓர் உலகத் தாயின் கடமையுடனும் வாஞ்சையுடனும் மூன்று நாட்களாக தம் பிள்ளையைக் காணாத வேதனையுடனும் துக்கத்துடனும் இருந்தாள். "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே" என்று யேசுவை பார்த்து கேட்கிறார். இது ஓர் உலக வாழ்வு வாழும் தாயின் நியாயமான கேள்விதான். ஆனாலும் இங்கு சிறு குறை உள்ளது அதாவது யேசு தேவனின் பிள்ளை, உலக மீட்பர் என்பதை உணர்ந்திருந்தும் மரியா இக் கேள்வியைக் கேட்கிறார். எனினும் அவர் இந் நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்து சிந்தித்து வந்தார், யேசுவின் இறை தன்மையை அவள் விளங்கியிருந்தாள் என்று குறிப்பிடப்படுகின்றது.

அதற்கு யேசு அவர்களிடம் "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்கிறார். அறிவிலும் ஞானத்திலும் வளர்ச்சியடைந்த யேசு தான் உலக காரியங்களுக்கல்லாது ஆன்மீக காரியங்களுக்காக ஈடுபட்டேன் என்பதை தெரிவிக்கிறார். எனினும் தனது தாய் மரியாவின் வேதனையை யேசு விளங்கியிருந்தாரா என்பதிலும் குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. எனினும் பின்பு அவர்அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்தார். அவர்களுக்கு பணிந்து நடந்தார் என்பது தனது தாய் தந்தையரை எவ்வாறு மதித்தார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதாவது குழந்தை யேசு கடவுள் என்ற நிலையிலும் மனிதர் என்ற நிலையிலும் வாழ்வதற்கான ஞானத்தை அவர் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக இறைவன், பெற்றோர், குழந்தை என்ற இனிய தொடர்பு இணையும் போது அழகான குடும்பம் உருவாகின்றது. நாமும் நமது கடமைகளை உணர்ந்தவர்களாக நமக்கான பொறுப்பினை இறைவன் வழங்கியுள்ளார் என்ற உணர்வுடன் நமது பிள்ளைகளை ஞானத்திலும் அறிவிலும் வளர்த்து நல்வழிப்படுத்துவோமாக.

**தொகுப்பு: கிறிஸ்டி முருகுப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்...

## இறை இரக்கம் மன்னிக்கிறது மற்றும் மறக்கிறது – திருத்தந்தை

கடவுளின் மன்னிப்பைப் பெறுவதற்கும், பிறரின் தவறுகளை மறந்து, பிறரை மன்னிப்பதற்கும் நம் இதயங்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற காலம் தவக்காலம் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். கடவுள் நம்மை மன்னிக்க விரும்புகிறார், ஆனால், நாம் மூடிய இதயங்களைக் கொண்டிருந்தால், அங்கே இரக்கத்தால் நுழைய முடியாது, கடவுளும் மன்னிக்க மாட்டார் என்றும் கூறினார் திருத்தந்தை. இரக்கம், பரிவன்பு, மன்னிப்பு ஆகியவை கடவுள் பண்புகள், முழு இதயத்தோடு மன்னிப்புக் கொடுப்பதும், மன்னிப்புப் பெறுவதும் இறை இரக்கச் செயல் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளின் மன்னிப்பைப் பெறுவதற்கு, நம் இதயங்களைத் தயாரிப்பதாக தவக்காலம் அமையட்டும் என்றும் கூறினார்.

மன்னிப்போம், மன்னிக்கப்படுவோம், பிறர்மீது இரக்கம் காட்டுவோம், அப்போது நாம் கடவுளின் இரக்கத்தை உணர்வோம், கடவுள் மன்னிக்கும்போது மறக்கவும் செய்பவர் என்று கூறினார்.திருத்தந்தை பிரான்சிஸ்.

## புலம்பெயர்ந்தவர்க்காகச் செபிக்க திருத்தந்தை அழைப்பு

போரினால் புலம் பெயர்ந்தவர்கள், மனிதமற்ற நிலைகளில் இருப்பதைக் குறிப்பிட்டு, அம்மக்களுக்காகச் செபிக்குமாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். புலம்பெயர்ந்தவர்க்கு முன்னணியில் நின்று உதவும் கிரேக்க நாடு மற்றும் பிற நாடுகள் பற்றிக் குறிப்பிட்டு, புலம்பெயர்ந்தவர்களுக்கு உதவுவதில் எல்லா நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று வலியுறுத்தினார் திருத்தந்தை. புலம்பெயர்ந்தவர் பிரச்சனையின் சுமை சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கு உதவியாக, சிரியா குறித்த அமைதிப் பேச்சுவார்த்தைகளில் திட்டவட்டமான முடிவு அவசியம் என்றும் கூறினார் திருத்தந்தை.

## ‘ஆஸ்கர்’ விருது பெற்ற பாகிஸ்தான் பெண்மணி ஷர்மீன்

இவ்வாண்டு நடைபெற்ற “ஆஸ்கர்” திரைப்பட விருது விழாவில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஷர்மீன் ஒபாய்த்-சினோய் (Sharmeen Obaid-Chinoy) என்ற பெண்மணி, குறுகிய ஆவணப்-படத்திற்கான விருதைப் பெற்றார். பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் கொடுமைகளில் ஒன்றான, தன்மானக் கொலைகள் (honour killing) என்ற கருத்தை மையப்படுத்தி, ஷர்மீன் அவர்கள் உருவாக்கிய ‘A Girl in the River: The Price of Forgiveness’ அதாவது, “ஆற்றில் ஒரு பெண்: மன்னிப்பின் விலை“ என்ற ஆவணப் படம் இவ்விருதைப் பெற்றுள்ளது.

19 வயது நிறைந்த சபா கைசெர் (Saba Qaiser) என்ற இளம்பெண், தான் காதலித்த ஒருவரை மணந்துகொண்டார் என்ற காரணத்திற்காக, அவரது தந்தையும், மாமாவும் அப் பெண்ணை, துப்பாக்கியால் தலையில் சுட்டு, பிளாஸ்டிக் துணியில் சுற்றி, ஆற்றில் எறிந்துவிட, அப்பெண் அந்தக் கொடுமை-யிலிருந்து அற்புத-விதமாகத் தப்பித்து, இக்கொடுமையை வெளிச்சத்திற்குக் கொணர்ந்ததை மையப்படுத்தி, இந்த ஆவணப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.



(தொடர்ச்சி - 29 பக்கம்)

இத்திரைப்படத்தை தன் அமைச்சரவை உறுப்பினர்களுடன் பார்த்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரிப் (Nawaz Sharif) அவர்கள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச.சந்திரகுமார்
(முத்தூர் நிலா)

உலக வரலாறுகள் எத்தனையோ கண்டுபிடிப்புக்களையும் உருவாக்கங்களையும், நெறிகளையும், ஆளுமைகளையும், புலமைகளையும், படைப்புக்களையும் மனித வாழ்வின் வளர்ச்சிக்காய் மற்றும் மேன்மைக்காக கொடுத்திருக்கின்றன. மேலும் கொடுத்துக் கொண்டு தான் இருக்கின்றன. இன்னும் கொடுக்கத்தான் போகின்றன.

மனிதனின் வளர்ச்சிப்படிகளில் முக்காலமும் அதாவது

1. கடந்த காலம்
2. நிகழ்காலம்
3. எதிர் காலம்

ஆகியன பாரிய தாக்கத்தை செலுத்துகின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மனித வளர்ச்சிப்படிகளில் இளமைப்பருவம் அல்லது யௌவனப் பருவம் இன்றியமையாதது. இளமை என்பது சிறுபராயத்திலிருந்து அல்லது குழந்தைப்பருவத்திலிருந்து வளர்ந்த அல்லது வயது வந்த நிலைக்குச் செல்வதாகும். மறுபுறத்தில் அது தங்கிவாழும் நிலையிலிருந்து தானாகவே இயங்கும் நிலைக்குச் செல்வதாகும். இளைஞர் ஒரு நிலையான வயது வந்தவர்கள் என்பதனை விட ஒரு இயங்கு (திரவ) நிலையினர் என்பது பொருத்தமாகும்.

இன்றைய நுகர்வுக்கலாச்சார உலகத்தில் இளைஞர்களை குடும்பம், சமூகம், சாதி, மதம், சமயப் போக்குகள், கலாசாரம், பண்பாடுகள், மேற்கத்தயகலாசாரம், கலாசார மறுசீரமைப்புக் கொள்கைகள், கதை, இலக்கியம், உலக மயமாக்கல், தனியார் மயமாக்கல், பொருளாதாரம், சமூக ஊடகங்கள், இணையத்தளங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள், கல்வி, சுகாதாரம், பாலியல், பால்நிலை, ஆடைகள், அணிகலன்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், போதைவஸ்து, மது, சினிமா , அரசியல், உள்நாட்டுப்போர், இடம் பெயர்வுகள், தேசியவாதம், மொழி வாதம், இனவாதம், முரண்பாட்டு நிலை மாற்றங்கள், சமாதானப் பொறிமுறைகள், மனித உரிமைகள், வேலை வாய்ப்புக்கள், சமத்துவக் கொள்கைகள் என்பவற்றுடன் இளைஞர்களின் தேவைகளும், அவர்களின் போக்குகளும் அவர்களை புடமிடுவதில் பாரிய பங்காற்றுகின்றன.

**" ....... இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் .........."**

என்பது வசனத்தில் மட்டும் தானா? என்ற கேள்வி ஒவ்வொரு இளைஞர்கள் மனதிலும் எழ வேண்டும். அதாவது "எவ்வளவு தான் செயல் உருவாக்கம் கொடுத்தாலும் குறித்தவர்கள் செயற்படவில்லையாயின் அது வெற்றியைத் தராது". எனும் உண்மை ஒவ்வொருவர் மனதிலும் தாமாகவே பொறிக்கப்படவேண்டும். இங்கு நாம் சில விடயங்கள் பற்றி தொடர் எழுத்துருவில் தர இருக்கின்றோம்.

யார் இளைஞர்கள்?

அவர்களது சமூகப்பங்கு என்ன?

சமூகத்தில் அவர்களின் வகி பாத்திரம் என்ன?

அவர்களின் வாழ்க்கை செயலாக்கம் என்ன?

அவர்களின் மேம்பாடுகள் என்ன? உருவாக்கங்கள் என்ன?

அவர்களின் வாழ்க்கை முறை என்ன? வழிகாட்டல்கள் என்ன?

அவர்களின் ஆற்றல்கள் என்ன? ஆளுமைகள் என்ன?

அவர்களின் திறன்கள் என்ன? பிரயோகங்கள் என்ன?

அவர்களின் எண்ணக்கருக்கள் என்ன? சிந்தனை செயலாக்கங்கள் என்ன?

அவர்களின் குணாம்சங்கள் என்ன? அதன் விளைவுகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இலட்சியங்கள் என்ன? இலட்சியப்பாதைகள் என்ன?
அவர்களின் தேவைகள் என்ன? நிறைவேற்றல்கள் என்ன?
அவர்களின் பலம் என்ன? பலவீனங்கள் என்ன?
அவர்களின் வாய்புக்கள் என்ன? அச்சுறுத்தல்கள் என்ன?
அவர்களது உறவுகள் என்ன? உரிமைகள் என்ன?
அவர்களது உணர்வுகள் என்ன? உணர்ச்சிகள் என்ன?
அவர்களது தேடல்கள் என்ன? நெருடல்கள் என்ன?
அவர்களின் சமயப்பணிகள் என்ன? சமூகப்பணிகள் என்ன?
அவர்களின் சமாதானச் செயல்கள் என்ன? முரண்பாட்டு நிலைமாற்றச் செயற்பாடுகள் என்ன?
அவர்களின் வெற்றிகள் என்ன? தோல்விகள் என்ன?
இவ்வாறான பல விடயங்கள் உள்ளடங்கியதாக இக்கட்டுரையானது தொடர இருக்கின்றது.

**" எண்ணித்துணிக கருமம் .....**

இது வள்ளுவன் வாக்கு. எதை எண்ணித்துணிதல் என்பது இளைஞர்களின் மனங்களிலும் செயல்களிலும் தான் தங்கியுள்ளன.

ஒரு மனிதன் முதலில் தான் யார்? என்பதை தெளிவாக அதே வேளை சுயமாக அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் எதனையும் தெளிவாகவும் ஆக்கபூர்வமாகவும் செய்ய முடியாது என்பதோடு வெற்றிக்கனி எட்டாக்கனியாகிவிடும். இது இளைஞர்களுக்கும் விதிவிலக்கானதல்ல.


**"இளைஞர்களே கனவு காணுங்கள்"**

எவ்வகையான கனவுகள் காண வேண்டும் என்பதனைக்கூட இளைஞர்கள் தான் முடிவெடுக்க வேண்டும். ஏன் காண வேண்டும்? என்பதும் அவர்களின் கையில் தான் உள்ளது. இளைஞர்களின் முன்னேற்றம் என்பது, எப்படி அவர்கள் தங்களை இனங்காண்பதில் தங்கியிருக்கின்றது என்பதை முதலில் சிந்தித்தல் வேண்டும். மறுபுறத்தில் சிந்தனையோடு மட்டுல்லாது செயற்படுதல் தான் வெற்றிப்பாதையின் அடிகோலாக அமைகின்றது. வேண்டும் வேண்டும் என்கின்றனர் ஆனால் எது வேண்டும் என்பதில் இன்னும் தெளிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இளைஞர்களின் சரியான தெரிவே அவர்களின் சிறப்பான ஆரம்பமாகும். எப்போது தெரிவில் தெளிவில்லையோ அங்கு முடிவும் தெளிவற்றதாகவும் முடிவற்றதாகவும் போய்விடுகின்றது.

**"........ இளமையில் கல்வி சிலையில் எழுத்து......."**

எதனைக்கற்க வேண்டும்? எப்படிக் கற்க வேண்டும்? ஏன் கற்க வேண்டும்? இக் கேள்விகளை ஒவ்வொரு இளைஞனும் தன்னைத் தானே கேட்க வேண்டும்.

எப்படியும் வாழலாம் என்பது ஒரு வகை. இப்படித்தான் வாழ வேண்டும் என்பது இன்னுமொரு வகை. இக் கேள்விகளையும் இளைஞர்கள் தம்மைத் தாமே ஆய்வு செய்தலின் போது கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான பல்வேறுபட்ட கோணங்களில் இளைஞர்களின் வாழ்வியல் இலக்குப்-பயணங்களை தொடரும் வண்ணமாக பல அடிப்படை தத்துவங்கள், கோட்பாடுகள், அறிவியல் விற்பன்னர்களின் கருத்துக்கள், பல ஆய்வுகளைக் கொண்டதாக பல்வேறுபட்ட விடயப்பரப்புக்களுடன் தொடர்ந்து சந்திக்கின்றேன்.




தொடரும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- சூசை எட்வேட

இலக்கிய சஞ்சிகைகள் இலங்கையின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் தோற்றம் பெற்று வந்திருக்கின்றன. ஆனால் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இப்போதுதான் "அலை ஓசை" எனும் பெயரில் முதல் முறையாக ஒரு இலக்கிய இதழ் தன் அலைக்கரங்களை விரித்துள்ளது! உலகப்பிரசித்தி பெற்ற ஒரு துறைமுக நகரிலிருந்து இவ்வளவு காலமாக ஒரு சஞ்சிகை தோன்றாததையிட்டு நாம் வெட்கமும் துக்கமும் அடைய வேண்டி-யிருக்கிறது! ஆகையால் வாசக அன்பர்களே, உங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டி இந்த அலை ஓசையை நாடெங்கும் ஓலிக்கச் செய்வது உங்கள் கடன்!.... இந்தப்பந்தியில் திருமலை மண்ணில் நடந்த முக்கிய, மனதை ஈர்த்த இலக்கிய நிகழ்வுகளை ஒவ்வொரு இதழிலும் அலசுவோம்.

கடந்த 31.01.2016ல் ஜேசுவிற் ஆங்கிலகலாசாலையில் நூல் வெளியீடு ஒன்று நடந்தது. நீங்களும் எழுதலாம் ஆசிரியர் தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் அரங்கேறியது. நூலின் பெயர் "யாழ்ப்பாண நினைவுகள்" அதன் ஆசிரியர் வேதநாயகம் தபேந்திரன் ஆவார். இங்கே முக்கியமான ஒன்றைக்குறிப்பிட வேண்டும். இலங்காபுரியில் தமிழில் ஒரு நூல் வெளியிடுவதென்றால் சிரம சத்தியமான ஒன்று. மலையைக் குடைந்து தோணி ஓடுவது போன்று!..... எப்படியோ, சனம் அதிகம் என்று இல்லாவிட்டாலும் முறைப்படி வெகு சிறப்பாகவே நடந்தேறியது! நூல் மதிப்பீடு செய்தோர் நன்றாகவே திறனாய்வு செய்து விதந்துரைத்துப் பேசினர்! நானும் அந்நூல்பற்றி கூறவேண்டியுள்ளது..........

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு தனித்துவம் இருக்கவே செய்யும். தனியான வரலாறு, பண்பாடு, பழக்கவழக்கம், கலை, கலாச்சாரம், பேச்சுவழக்கு...... என்று தனித்துவமானதாகவே இருக்கும்! அவையெல்லாம் இந்த நவீன யுகத்தில் கலாசாரத்தில் அடிபட்டு அடிச்சுவடே இல்லாமல் அழிபட்டுப் போக விடலாமா? தபேந்திரனுக்கு மட்டும் இந்தச் சிந்தனை ஏற்பட்டு செயல்வடிவம் பெற்றிருக்கின்றது. அதன் விளைவே யாழ்ப்பாண நினைவுகள். ஈழத்தமிழரின் அரசியல் மையம், கலாசார மையம் யாழ்ப்பாணம்தான் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்! ஆகையால் யாழ்ப்பாணத்துக் கென்று தனித்துவமான பல சங்கதிகள் உண்டு! அதிலும் போராட்ட காலத்திலும், பொருளாதார நிலையிலும், வாழ்வியலிலும் மிகவும் நெருக்கடியைச் சந்தித்த மக்களாக யாழ் குடாநாட்டு மக்கள் இருந்திருக்கிறார்கள்! பழைய பண்பாட்டு பழக்கவழக்கங்களையும், கலாசாரத்தையும் ஒன்றும் விடாமல் ஆய்வு செய்து தேடி அறிந்ததோடு யுத்த கால நெருக்கடிகளில் எவ்வாறு தங்கள் மூளையைப்பாவித்து தங்கள் நாளாந்த சீவிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்! அந்தக் கெட்டித்தனங்களை, சூட்சுமங்களை எல்லாம் அழகாக எடுத்தியம்பியிருக்கிறார் இந்நூலில்!

பனை மரத்தை கற்பகதரு என்று சொல்வார்கள். அடியிலிருந்து நுனிவரை மனிதவாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் வழங்கி வாழச் செய்யும் அது! யாழ் மக்களை வாழ்வினை உயரச்செய்தது பனையென்றால் மிகையாகாது!

கருப்பநீரில் பனங்குட்டான் செய்வது, பனம் பழத்தில் பாணிபினாட்டு செய்வது, பனங்கொட்டையை விதைத்து பனங்கிழங்கு, ஒடியல், ஒடியல் கூழ் காய்ச்சுவது, குருத்தோலையால் பெட்டி கடகம் பின்னல் பாய் என்று செய்வது, ஓலையால் வீடுவேய்வது வேலி அடைப்பது மட்டையைக் கொண்டே வரிச்சி பிடிப்பது, பனைநாரைக் கொண்டே கயிறாகக் கட்டுவது, என்று அவர்கள் சொந்த மூலதனத்தைக் கொண்டே சிறப்பாக வாழ்ந்த வாழ்க்கை முறையை அழகாக அடுக்கிக் கொண்டே போகிறார்!........ அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையின் போது பனம்பழத்தால் உடுப்புக் கழுவியிருக்கிறார்கள்!

திருகோணமலைக்கு தனித்துவமான வரலாறும் பண்பாடு கலாச்சாரமும் உண்டு! இதிகாசகாலத்தில் இருந்தே புகழ் பெற்ற தலம் இது! வெள்ளைக்காரரின் செல்லப்பிள்ளையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து செழித்து வளர்ந்த நகரம் இது! வெளி நாட்டுக் கப்பல்கள் தரித்த இடம்; கப்பல் காரர் புழங்கிய இடம்; பணப் புழக்கமும் சனப் புழக்கமும் மேலோங்கி இருந்த இடம்! உள்ளூரிலும் வேலைவாய்ப்புக்காக, வசதிவாய்ப்புக்காக வந்து குடியேறிய இடம்!..... வீட்டுக்கு வீடு கிணறு, மலகூடம் என்று அமைத்து நாகரீகத்தில் முன்னேற்றமாக வாழ்ந்த இடம்!

சாதியை எப்பவோ விட்டொழித்த நகரம்!..... இன்றும் பழம் பெருமை கண்ட இடம்; தம்பலத்தால் கமம் செய்து அயல் நாட்டுக்கு உவந்தளித்த தம்பலகாமம். முத்தள்ளி உலகுக்கீந்த முத்தூர் மூதூர் இருக்குமிடம். தாமரைத்தண்டறுத்து திரிதிரித்த கோணேசருக்கு விளக்கிட்ட இடம் திரியாய், கோணேசருக்கு அவித்தக் கொட் சாம்பலைப்பரவிய இடம் சாம்பல்தீவு, குமரேசன் மன்னன் ஆண்ட குமரேசன் நாடு. (கோமரசன்கடவ) பாண்டியனை போரிலே வென்று அவன் "உறவைப் பெற்றானை" (ஹொறவப்பொததான) முதலிப்பழம் தந்த முதலிக்குளம் (மொரவேவா), இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம்!..... இவையெல்லாம் பதிவு செய்து நூலுருவாக்கம் செய்ய வேண்டியது திருமலை அறிஞர் பெருமக்களின் கட்டாயப்பணியாகும்!

## நலம் நாடி தொடர்ச்சி....

நீரழிவு நோய்க்கான பாதிப்பின் காரணிகள் ஆவன (Risk factors)

- குடும்ப பின்ணணி • அதிகளவு நிறை

எம்மில் அதிகளவு கொழுப்பு காணப்படும் போது இன்சுலின் தொழிற்படுவதைக் கடினப்படுத்துகின்றது.
இடுப்பின் சுற்றளவு Ã80cm (31.5inch) பெண்கள்
Ã90cm (34.5inch) ஆண்கள்

- கூடுதலான நேரம் ஓரிடத்தில் அமர்ந்த வேலை செய்தல் அல்லது உடற் பயிற்சியின்மை.
- ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம்.
- அதிகளவு கொழுப்பு, சீனி, நார்ச்சத்து அற்ற உணவு.
- உயர் குருதி அமுக்கம்.
- அதிகளவு தீய கொழுப்பும் குறைந்த நல்ல கொழுப்பும் இரத்தத்தில் காணப்படல்.
- கற்பகாலத்தின்போது நீரழிவினால் பாதிக்கப்பட்டிருத்தல்.

நோயை கண்டறிதல்

10 மணிநேர நோன்பின் பின் காலை இரத்த சர்க்கரை அளவு 200mg/dl or 7.0mmol/L (FBS)

உணவின் பின் இரண்டு மணி நேரத்தின் பின் 200mg/dl or 11mmol/L.

## நன்றி கொன்றார்...

எங்கே புரியப்போகிறது? தங்கள் சாமர்த்தியத்தால் தான் தங்கள் காரியத்தை சாதித்து விட்டதாக நினைக்கிறாள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல ஒரு பெரிய உதவியை நாம் செய்திருக்கிறோம்!..... ஒரு நாள் புருசனோடு யோகமலர் எங்கள் வீட்டுக்கு வந்தாள் "சித்தப்பா, அம்மாவுக்கு வருத்தம் முத்திப்போச்சுது! கனநாளாக வருத்தமா ஆசுப்பத்திரியும் ஆளுமாக மருந்தும் கையுமாக திரிஞ்சது உங்களுக்குத் தெரியும்தானே.... இங்க இனி வைத்தியம் பாத்து சுகப்படுத்த ஏலாது எண்டு தெரிஞ்சி போச்சிது! கொழும்பில நவலோக்காவில காட்டினாத்தான் சுகம் வரும் எண்டு கனபேர் யோசனை சொல்லுறாங்கள். அங்கதானாம் ஒவ்வொண்டுக்கும் எண்டு இஸ்பெஸலிஸ்ட் டொக்டர்மார் இருக்கிறார் எண்டும் சொல்லுறாங்கள்.... அம்மா ராவு ராவா நித்திரயும் இல்லாம எங்களையும் நித்திரை கொள்ளவிடாம தலைக்க என்னவோ செய்யுது வலிக்குது எண்டு ஆக்கினைப் பட்டுக் கொண்டிருக்கா! நிலைமை ரொம்ப மோசமா இருக்கு! அங்க போய் வைத்தியம் பாக்கிறதெண்டா நியாயமான செலவாகும்!...... உங்களத்தான் நம்பியிருக்கிறம் சித்தப்பா. எங்கள கைவிட்டுடாதேயுங்கோ!" என்று அழுது வேண்டினாள்.... இவர் மறுபேச்சின்றி ஒரு இலட்சம் கொடுத்து வழியனுப்பி வைத்தார்!

சமீபத்தில் கணவனோடு வீட்டுக்கு வந்தாள் யோகமலர் அழைப்பிதழ் என்று தந்தாள் கடைசியாகப்பிறந்த தன் மகனுக்கு ஒரு வயது கொண்டாட்டத்தை வெகு கிரான்டாக செய்யப்போகிறார்களாம் என்றும் சொன்னாள்!

அந்த பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு நாங்கள் போகவில்லை. அன்றைய தினம் எனக்கு உடம்பு நல்லாவே இல்லை. அதை விட அன்று மழையும் குளிருமாக இருந்தது. போகமுடியாமல் இருந்தது!

இதுதான் நாங்கள் செய்த பெருங்குற்றம்! இதை மனதில் வைத்துத்தான் கோபம் சாதிக்கிறாள் பழிவாங்குகிறாள் போல் இருக்கிறது! அதனால்தான் நத்தார் வருசம், பெருநாள் திருநாள் காலத்திலும் வீட்டுக்கு வராமல் முகம் கொடுக்காமல் இருக்கிறாள் என்று விளங்குகிறது!

யார் எப்படித்தான் உதவி செய்தாலும் இவர்கள் வாழ்வில் உய்வில்லாமல் திரிவதற்கு இந்தக் குணம்தான் காரணம் என்பதை இவர்கள் எல்லாம் என்றுதான் புரிந்து கொள்ளப்போகிறார்களோ!

.........................................யாவும் கற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறோம்...



அருட்சகோதரி எம்.சாந்தினி (அ.கா) அவர்கள் தனது துறவற வாழ்வின் இருபத்தைந்தாவது ஆண்டினை நினைவு செய்வதையிட்டு அலை ஓசை குடும்பம் தனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவர் யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தனது கல்வியை அச்சு வேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் முடித்துக் கொண்டு 1987ம் ஆண்டில் அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபையில் இணைந்தார்.

1991.01.06 இல் தனது துறவறவாழ்வில் முதல் வாக்குத் தத்தத்தினைப் பெற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு புனித சூசையப்பர் மடத்திலும், முருங்கன் கார்மேல் அகத்திலும். மூதூர் புனித திரேசாள் மடத்திலும் பின்னர் திரகோணமலை புனித சூசையப்பர் மடத்திலும் பணி புரிந்துள்ளார். வாழைச்சேனை, இருதயபுரம், முருங்கன் ஆகிய இடங்களில் ஆசிரியையாகவும் பணிபுரிந்துள்ளார். தற்போது திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் உதவி அதிபராகவும் திருகோணமலை புனித சூசையப்பர் கன்னியர் மடத்தின் தலைவியாகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

பாதிக்கப்பட்டவர்கள், ஏழ்மைப்பட்டவர்கள் சார்பில் இரக்க சிந்தனையும் உதவும் மனப்பான்மையும் கொண்ட இவரின் துறவற வாழ்வு மேலும் மிளிர எமது வாழ்த்துக்கள் என்றும் தொடரும்.

---

**ஆஸ்கர் விருது.....**

தன்மானக் கொலைகளைத் தடுக்கும் சட்டம் கண்டிப்பாகக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தன்னிடம் கூறியதாக, இத்திரைப்படத்தை உருவாக்கிய ஷர்மீன் அவர்கள் "ஆஸ்கர்" விருது விழாவில் கூறினார். பாகிஸ்தானில் தன்மானக் கொலைகள் தடைசெய்யப்படும் சட்டம் அமலுக்கு வந்தால், தான் அடைந்துள்ள "ஆஸ்கர்" விருதைக் காட்டிலும் பெரிதும் மகிழ்வேன் என்றும் 'ர்மீன் அவர்கள் இவ்விழாவில் கூறினார்.

ஒவ்வோர் ஆண்டும் பாகிஸ்தானில் 4000 பேர் தன்மானக் கொலைகளுக்கு உள்ளாகின்றனர் என்றும், இவர்களில் 1000பேரின் கொலைகளே வெளிச்சத்திற்கு வருகின்றன என்றும் ஆசிய செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

AsiaNews /வத்திக்கான் வானொலி

## வாழ்த்து...

திருமலை மறைமாநிலத்தின் புதியதொரு வெளியீடு சமய, சமூக, இலக்கியங்களை தனக்குள் வாங்கி வெளிகாட்ட வரவிருக்கும் சமூகத்தொடர்பு நிலையத்தின் தலைப்பேறாய் வெளிவர உள்ள அலை ஓசை சஞ்சிகையை என் உளமார வாழ்த்துகிறேன். நற்பணிகள் நிறைந்துள்ள நம்மறை மாநிலத்தின் பொற்பணிகள் தனைக் காட்டும் அற்புத சஞ்சிகையாய் பொற்தடங்கள் பதித்தெழுந்தே பொலிவுறவே மீண்டும் மீண்டும் அலை ஓசை சஞ்சிகையை அகமகிழ்ந்தே வாழ்த்துகிறேன். வாழ்க வளர்க வலிமை வேர் நிலையனைத்தும் அள்ளிச் சுமந்து காட்ட அலை ஓசை சஞ்சிகையை வாழ்த்துகிறேன்.

அருட்பணி N.C. அருள்வரதன்
பிரதம ஆசிரியர்
திருமலைத்தீபம்


### "அலை ஓசை" யில் விளம்பரம் செய்ய......


தங்கள் வியாபார நிலையங்கள், ஹோட்டல்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்.

| | |
|---|---|
| பிற்பக்கம் (முழு வண்ணப்படம்) | ரூபா 5000.00 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா 4000.00 |
| அரைப்பக்கம் | ரூபா 2000.00 |
| காற்பக்கம் | ரூபா 1000.00 |

தொடர்பு :
ஆசிரியர், அலை ஓசை,
17, புனித அந்தோனியார் வீதி,
திருகோணமலை, 0776771119,
trincoalaiosai@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org